அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page No. 521.
ACC No. 18586.

மலர்: 8
இதழ்: 11
விலை அ. 4

துன்முகி ஹூ மாசி மீ
பிப்ரவரி—மார்ச் '57

வருட சந்தா
ரு. 2-4-0



திருஞானசம்பந்தர் திருவீழி மிழலையில்
பொற்காசு பெறுதல்

சித்திர விளக்கம் 35; பக்கம் 587

பொருளடக்கம்

			பக்கம்
1. அவதாரம்	(திருப்புகழ் மணி)	...	581
2. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை B.A.B.T.,)			583
3. வீதியில் பெற்ற காசு	(கி. வா. ஜகந்நாதன்)	...	587
4. கட்டபொம்மர் கால்வழி	(ரசபதி)	...	591
5. மகத்தான பரிசு	(கோமதி ராஜதங்கம்)	...	600
6. படைப்பிலே மாட்சி	(எஸ். வி. ரமணி)	...	603
7. வாழ்க்கை யாது?	(சிவானந்த விஜயலக்ஷ்மி)	...	608
8. பழமைத் திருப்புகழ் விரிவுரை	(குகஸ்ரீ)	...	617
9. சிராகுல சல்லாபன்	(கி. வா. ஜ.)	...	623
10. Roots of Culture	*(Thiruppugal Mani)*	...	627

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 9—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ௵ மாசி ௴ டிசம்பர்-56—ஜனவரி-57	இதழ் 11

அவதாரம்

(திருப்புகழ் மணி)

தெய்வம் ஒன்றே எங்கும் நிறைந்திருக்கும் தன்மையுடையது. பதினன்கு உலகங்களையும் ஸகல ஜீவராசிகளையும் தன்னுள் அடக்கி விளங்குகின்றது. "தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடியெல்லாம் தங்கும்படிக்கு இச்சை வைத்து உயிருக்கு உயிராய் தழைத்தது" எதுவோ அதுதான் ப்ரம்மம்; கடவுள் என்றார் ஸ்ரீ தாயுமானவர். எல்லா உயிர்க்கும் உயிராகி நிற்றல் ப்ரம்மம் என்றால், எந்த ஜீவனை அவதாரம் என்று சொல்லுவது? எந்த ஜீவனை அவதாரமில்லை யென்று சொல்லுவது. ராமாவதாரத்தைச் சொல்லும் போது கம்பர் பாடுவார்

"வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போல் [கும்
உள்ளும் புறத்து முளனென்ப!"

புண்ணிய பாப சேர்க்கையால் அல்லவோ பிறவி ஏற்படுகின்றது. ப்ராரப்த கர்மாவினால் ஏற்படுவது

தாயாகித் தந்தையாய்த் தாங்கும் திருவருளை
வாயாரப் பாடி வழுத்த அருளுதியோ

பிறப்பு. இப்படிப் பிறக்கும் ஜீவர்களை அவதாரமென்று சொல்லலாகாது. இன்ப துன்பமென்ற கட்டுக்குள் தள்ளப்படும் ஜன்மம் ஸ்வய இச்சையால் ஏற்படாமல், பண்டைவினை காரணத்தால் சிறையாகிய உடலுள் தண்டனைக்கும், கடைசியில் விடுதலைக்குமாய் ஏற்படு கின்றது. அவதார ஜன்மாக்களோ, ஜீவராசிகளிடம் கொண்ட கருணையால், அவைகளை ரக்ஷிக்கவும், அவை களைச் சிறை நீக்கி, விடுதலை யென்ற மோக்ஷமடைவிக்க வும், மஹா சாதுக்கள் போலவும், பிறப்பில் தாம் போந்து உதவுவதாகும். காரண காரியத்தால் அல்லா மல், அன்பின் காரணத்தால் ஜன்மமெடுத்து, மற்றைய ஜீவராசிகளின் ஜென்மத்தை, பந்தத்தைப் போக்கவே தோன்றுவது அவதாரமாகும். இரக்கம் கொண்டு ஜீவ ஞய் இரங்குதல்தான் அவதாரம். இந்த அவதார விசேஷத்தைக் குமாரன், ராமன், க்ருஷ்ணன் முதலாய இவர்கள்பால் தெளிவுறக் காணலாம்.

"அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
ப்ரம்மமாய் நின்ற ஜோதிப் பிழம்பு அதோர் மேனியாகிக்,
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும்
[கொண்டே
ஒருதிரு முருகன் வந்துஆங்கு உதித்தனன் உலகம் உய்ய".

இது கருணையால் உதித்த முருகனைப் போற்றும் பாடல்!
ஸ்ரீ ராமபிரான் அவதரித்தான்;

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர் மும்மைத் தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன், கைவில் ஏந்தி
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட் டயோத்தி
[வந்தான்"

ஜீவராசிகளிடத்தில் நிறைவான கருணை யில்லாவிடில் அது அவதாரமாகாது. ஆண்டவன் சக்தியெல்லாம்

பன்றிக் குருளைகட்குப் பாலளித்த பேரருளை
என்றும் நினைவேனை ஏற்பதுநீ என்றேயோ

பக்தரைச் சுற்றிக் கொண்டு ரக்ஷிப்பதால், குறை யற்ற சக்தி பெற்று கருணை பரப்பும் பிறப்பே அவ தாரமாகும். மக்களின் அவத்தை யொழித்து அவரைச் சிவத்தில் நாட்டும் தன்மையே அவதாரத்தின் தன்மை யாகும். சிறைப்படுவது ஜன்மம். அன்பினாலும் காருண்யத்தாலும் விடுதலை பெற்றும், சேவைக்கு விலைப்படுவது அவதாரம் என்று சொல்லலாம்.

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A. B.T.)

5. சிதம்பரம்

எல்லாம் வல்ல முழுமுதல்வன் உயிர்களுய்யுமாறு அருள் திருமேனி கொண்டெழுந்தருளி யுள்ள தலங்களிற் சில மூர்த்தியால் மட்டும் சிறப்புடையன; தலச்சிறப்பு மட்டும் சிலவற்றில் காணலாம்; தீர்த்தத்தால் உயர்ந்தவை களும் சிலவுள. ஆனால் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றிலும் பெருமை பெற்ற தலங்கள் மிக மிகச் சிலவே. அவற்றுள் சிதம்பரமும் ஒன்றாகும்.

மூர்த்தி :—இப்புண்ணியப் பதியின் சிறப்புக் கெல்லாம் ஆதி காரணமாய் நிற்கும் அமலன் ஆனந்தக் கூத்தனை நடராச மூர்த்தியே.

"சிற்பரன் தற்பரன் சீர்திகழ்த் தென்புலியூர்
ருத்திரன் பத்திரஞ் சூல கர்த்தன் சபையில்
தித்திஎன் றொத்திநின் றாடு சிற்றம்பலவர்-தம்பிரானே(திருப்)

[ஞானபரனும், தற்பரனும், சிறந்தோங்கும் தென்புலியூரில் விளங்கும் உருத்திரனும், மூவிலைவேல் மூர்த்தியும், சபையினில் 'தித்தி' என்ற ஒத்துடன் ஆடும் சிற்றம்பலவருமான நடராச மூர்த்தியின் தம்பிரானே.]

பாணனுக்கே ஆளா விறகெடுத்துப் பாடிமகிழ்
மாணும் திருவருளை யான்மறக்க மாட்டேனே

தலம் :—

இத்தலம் பூலோக கயிலாயம்: அரனார் ஆடிய அம்பலங்கள் ஐந்தினும் பொன்னம்பலம். திருநீலகண்டனாரை இளமை ஆக்கினார்க்குரிய தலம் இதுவே. திருநாளைப் போவார், கூற்றுவநாயனார், கோச்செங்கட் சோழநாயனார், கணம் புல்லர், திருமூலர் முதலிய நாயன்மார்கள் இப்பதியில்தான் அருள் பெற்றனர். மூவர் முதலிகளது அருமை அருட் பாடல்கள் இத்தலத்திற்குண்டு. ஆளுடைய அடிகளாகிய மணிவாசகர் திருவெம்பாவை பாடிய திருவாயால் திருச் சிற்றம்பலக் கோவை பாடியருளியதும், யாவும் யாரும் கழறினவாறு அறியும் ஆற்றலை ஆண்டவன் திருவருளால் அடைந்த கழறிற்றறிவார் என்னும் சேரமான் பெருமாள் நாயனார், பொன்வண்ணத் தந்தாதி என்ற திவ்வியப் பிரபந்தம் செய்தருளியதும் இத்தலத்திலேயாம். திருமாளிகைத் தேவர், சேந்தனார் முதலிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டின் ஆசிரியர்களது அருமைப் பாடல்களும் ஏற்றது.

திருத்தொண்டர் திருவந்தாதி அருளிய நாரையூர் நம்பியாண்டார் நம்பிகள், இராசராஜ சோழனார் வேண்டியவாறு தேவாரத் திருப்பதிகங்கள் எழுதிய ஓலைகள் இருந்த திருமுறைக் கோவிலைத் திறந்தெடுத்து, திருமுறைகளை அடைவு படுத்திய சிறப்பும் இத்தலத்திற்கே உரியது.

'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவா'
எனப்படும் தெய்வச்சேக்கிழார், வானிழல்வழி
"உலகெலாம்"

என எடுத்துக் கொடுக்க, அம்பலவாணர் அருள்மொழி கொண்டு திருத்தொண்டர் புராணம் பாடி அரங்கேற்றியதும் சிதம்பரத்தில்தான்.

சமய குரவர்களும் நாயன்மார்களும் அன்றி சந்தான குரவர்களாகிய மறை ஞான சம்பந்தர், உமாபதி சிவம் போன்ற ஆசிரியர்களும் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

வந்திக்கு ஆளென்று மண்சுமந்த பேரருளை
சிந்திக்குந் தோறும் சிலிர்க்கின்ற தென்மெய்யே

முநிவர்கள் :—புலிக்கால் முனிவரான வியாக்ரபாதரும், பாம்பு முனிவரான பதஞ்சலியும் திருநடங்காணும் சிறப்புமு இத்தலத்தினதே. பாலுக்கு அழுத பாலகனாகிய உபமன்யு என்னும் முனிவர்க்குப் பாற்கடலைப் பரமனார் அருளியதும் இத்தில்லையம் பதியிலேயாம்.

"இனியமுத புலிபாதனுடன் அரவு சதகோடி
இருடியர்கள் புகழ் ஞான—பெருமாளே"
"இமையவர் முனிவர் பரவிய புலியூரினில்
நடமருவும்—பெருமாளே"
"மவுலியி லழகிய பாதாள லோகனும்
மரகத முழுகிய காகோத ராசனும்
மநுநெறி யுடன்வளர் சோணாடர் கோனுடன்—உம்பர்சேரும்
மகபதி புகழ்புலி யூர்வாழும் நாயகர்"

தில்லைமூவாயிரவர் :—

தில்லை மூவாயிரவர் இறைவனை முப்போதும் திருமேனி தீண்டும் சிறப்புடையர். மறைநூல் வழி மாறாதவர். கற்றாங்கு அரிய அழல் ஓம்பி வேள்வியால் கலியை வாராது காப்பவர். பரமனையும் அன்பு மிகப் பூசிக்கும் பெருமையர். இதனால் இவர்களது திருமுகத்தில் சிவப் பொலிவு என்றென்றும் துலங்காநிற்கும். இவற்றை நமது அருணையர் தில்லைத் திருப்புகழில்,

"வேத நூல்முறை வழுவாமே தினம்
வேள்வியால் எழில்புனை மூவாயிர
மேன்மை வேதியர் மிகவேபூசனை—புரிகோவே"

[மறைநூல் உணர்த்தும் வழிநடை மாறாது நாளும் வேள்வி செய்தலால், (சிவதேஜஸ்) சிவப் பொலிவுடைய மேன்மைமிக்க மூவாயிரம் அந்தணர்கள் சிறப்பொடு வழிபடும் தலைவனே]

எனக் குறிப்பிடுகின்றனர். இச்செய்தி,

"கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம்"

என்ற புகலியில் வித்தகராகிய ஆளுடைய பிள்ளையின் அமிர்த கவித் தொடையினை நினைப் பூட்டுகின்றது.

மணிவா சகர்க்கா மறைப்பரிமேல் வந்தாய்
எணியென்றன் நெஞ்சம் கரைகின்ற தெந்தாயோ

பிரமனுதியர் வழிபாடு

முன்னொரு சமயம் துங்கநதியாகிய கங்கையின் கரையில் வேதமனைத்தும் வல்ல வேதத்தோன் (பிரமனுர்) வேள்வி ஒன்று இயற்ற விரும்பினுர். அதனை இனிது உடனிருந்து சிறப்பிக்குமாறு தில்லைவாழ் திருமறையவர்களையும், தேவராயினுர் அனைவரையும் வருமாறு நாரதர் மூலம் அழைப்பு அனுப்பினுர். ஆனுல் அந்தணராதியோர், அம்பலம் ஆடரங்காக வெளிவளர் அற்புதக் கூத்தென்னும் அமுதினை, ஒழியாது அருந்துதல் விட்டு வேள்விக்கு வர இயலாதென விளம்பினர். இதனைக் கேள்வியுற்ற நான்முகனுர் தில்லைக்கு ஒல்லையில் ஓடிவந்தார்; தேவராதியருடன் திருநடங்கண்டு வணங்கித் திருவருள் பெற்றுர்.

" வேதத்தோன் முதலாகிய தேவர்கள்
பூசித்தே தொழ வாழ்புலி யூரினில்
மேலைக் கோபுர வாசலில் மேவிய—பெருமாளே "

எனவே பொன்னம்பலமாகும் புண்ணிய தலமானது, தேவர், முனிவர், அரசர்கள், அடியர், ஆசிரியர்கள் அனைவராலும் வழிபட்ட சிறப்புடையது என்றறிந்தோம். மேலும் இத்தலத்தில்தான், உலகெங்கும் உள்ள சிவாலயங்கள் தோறும் சென்று விரிந்த சிவகலைகள் அனைத்தும், சிதம்பரத்தில் அர்த்த ஜாம பூசை வேளையில் திரண்டுவந்து ஒடுக்கம் பெறுகின்றன. எனில், தென்னுடையசிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனுகும் சிறப்பையும் விளக்குகின்றதல்லவா?

முந்தையோரைப் போன்றே அருட்புலவராகிய குமரகுருபர சுவாமிகளும், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட்கோவை, சிவகாமி இரட்டை மணிமாலை பாடிய பெருஞ்சிறப்பும் உடையது. அருணகிரியார் இத்தலத்தில் அருளிய பாடல்கள் அவரடைந்த அநுபவத்தை மிக மிகத் தெளிவாய் விளக்குகின்றன. அவற்றையும், இத்தலம் தீர்த்த மகிமையுடைய தென்பதனையும் அடுத்த இதழில் ஆராய்வோம்.—

நரியைப் பரியாக்கி நாடறியச் செய்த
பெரியாயுன் பேரருளென் பேச்சில் அடங்கிடுமோ

வீழியில் பெற்ற காசு

(கி. வா. ஜகந்நாதன்)

திருஞானசம்பந்தப் பிள்ளையார் சோழநாட்டில் உள்ள பல தலங்களுக்குச் செல்லும் வழியில் திருச்சாத்தமங்கை சென்று, அங்கே திருநீலநக்க நாயனார் மனையிற் போய் அவர் அளித்த விருந்தருந்தி இன்புற்றார். பிறகு திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்ட நாயனாருடன் அளவளாவியிருந்து திருமருகல் என்னும் தலத்தை அடைந்தார்.

வைப்பூர் என்னும் ஊரில் தாமன் என்னும் வணிகன் ஒருவன் இருந்தான். அவனுடைய மருகனுக்கு அவன் தன் மூத்த மகளை மணம் புரிந்து தருவதாகக் கூறினான். பின்பு வேறு ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்துவிட்டான். அவனுக்கு ஏழு பெண்கள். இப்படியே ஒவ்வொரு பெண்ணையும் தருவதாகச் சொல்லி ஆறு பேர்களை வேறிடங்களில் மணம் செய்து கொடுத்தான். ஏழாவது பெண்ணும் அந்த மருகனும் அவனை அறியாமல் ஊரை விட்டுப் புறப்பட்டு வந்துவிட்டார்கள். அவ்விருவரும் திருமருகலுக்கு வந்து ஒரு மடத்தில் இரவில் தங்கித் துயின்றார்கள். அவ்விரவில் அந்த வணிகனைப் பாம்பு தீண்டியதால் அவன் இறந்தான். அவனுடன் வந்த பெண் அது கண்டு நிலை தளர்ந்து சோர்ந்து கோயிலுள்ள பக்கம் நோக்கி இறைவனிடம் முறையிட்டு அழுதாள். "தேவர்களெல்லாம் உய்யப் பெருநஞ்சை உண்ட அமுதே, பாம்பையே அணியாகப் புனைந்த நிமலா, ரதிதேவி வேண்ட வெந்து பொடியான காமனை மீண்டும் உயிர்ப்பித்து அளித்த புண்ணியனே, காலனைக் காலால் உதைத்த பெருமானே, இந்த நஞ்சின் வேகம் நீங்கும்படியும், நான் இடர்க்கடலினின்றும் கரையேறும்படியும் அருளவேண்டும் ஐயனே!" என்று முறையிட்டுக் கொண்டிருந்தாள்.

அப்போது சம்பந்தப் பெருமான் மருகலில் எழுந்தருளியிருக்கும் மாணிக்க வண்ணரைத் தரிசிக்கும் பொருட்டுக்

என்னுளத்தில் நின்றனருள் என்றும்தங் கிப்பொங்க
மன்றுடையாய் நாயடியேன் மன்றுடல் ஓர்ந்திலையோ.

கோயிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். அவர் காதில் இந்தப் பெண் புலம்பும் ஒலி விழுந்தது. பிள்ளையார் உடன் வந்த தொண்டர்களுடன் அந்தப் பெண் இருந்த இடம் சென்று, விசாரித்து உண்மையை உணர்ந்து கொண்டார். உடனே அஞ்சேல் எனக் கையமர்த்தி, "சடையாய் எனுமால்" என்ற பதிகம் பாடி, "இந்தப் பெண் உள்ளம் வாடி மெலிவது தகுமோ?" என்று வினவாக ஒவ்வொரு பாடலையும் முடித்தார். பாடிய போதில் இறைவன் திருவருளால் அந்த வணிகன் நஞ்சின் வேகம் தீர்ந்து எழுந்தான். அவனும் அவன் மாமன்மகளும் பிள்ளையாரை வணங்க, அப்பெருமான் அவ்விருவரையும் திருமணம் செய்துகொண்டு வாழும்படி ஆசி கூறியருளினார்.

அப்பால் மருகற்பிரானைத் தரிசித்துக்கொண்டு திருப்புகலூரை வந்து அடைந்தார். அங்கே இறைவனைத் தரிசித்துக்கொண்டு முருக நாயனார் திருமடத்தில் தங்கியிருந்த திருநாவுக்கரசரும் அங்கே வந்து உடன் உறைவாராயினர். சின்னாள் கழித்துத் திருவாரூர் சென்று வணங்கி அம்பர் முதலிய பிற பதிகளுக்கும் போய் வழிபட்டார். திருநாவுக்கரசரும் பிள்ளையாருடன் வரவே இருவரும் கால்நடையாகவே செல்ல, சம்பந்தப்பிரானுடைய சிவிகை பின்னே வந்தது. அப்பர் பிள்ளையாரைப் பார்த்து, "எம்பெருமான் தாங்கள் ஏறுவதற்காக இச் சிவிகையைத் தந்தருளினான். அதன்மேல் தாங்கள் ஏறி வரவேண்டும்" என்று சொன்னார். அப்பர் தரையில் நடந்து வரத் தாம் சிவிகையில் செல்வதற்கு மனம் இல்லாத சம்பந்தர், "தாங்கள் முன்னே சென்று தலங்களைத் தரிசியுங்கள். நான் பின்னே வந்து சேர்ந்து கொள்கிறேன்" என்றார். அதுமுதல் நாவுக்கரசர் ஒரு தலத்துக்கு முன்னால் சென்று தங்கக் காழிப் பிள்ளையார் சிவிகையில் அப்பால் சென்று இருவரும் இறைவனை வணங்கும் வழக்கம் அமைந்தது.

சம்பந்தப்பிரான் திருவீழிமிழலையை அடைந்தார். பல நாட்களாக அவரைப் பிரிந்திருந்ததனால் சீகாழியில் உள்ள

தாமரையின் நீர்போல் தாரணியில் யான்வாழ
மாமறைசொல் வள்ளால் மகிழ்ந்தருளல் செய்யாயே

வர்கள் அவரைக் காண வேண்டும் என்ற ஆசை உந்த யாவரும் கூட்டமாகத் திருவீழிமிழலைக்கு வந்து சேர்ந்தார்கள். வந்து ஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்குச் சென்று அப் பெருமானை வணங்கி, "எங்களுடன் சீகாழிக்கு எழுந்தருள வேண்டும்' என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். "இங்குள்ள இறைவன் அருளைப் பெற்று இன்று இருந்து பிறகு போகலாம்" என்று அவர்களுக்குக் கூறி அவர்களையும் தங்கச் செய்தார்.

அன்று இரவு சிவபெருமான் சம்பந்தர் கனவில் தோன்றி, "திருவீழிமிழலையுள் இருக்கும் விண்ணிழி விமானத்தில் சீகாழியில் தோணியில் நாம் இருக்கும் காட்சியைக் காட்டுகிறோம்" என்று அருளிச் செய்தான். அது கேட்டு அதிசயித்த பிள்ளையார் காலையில் எழுந்து திருக்கோயில் சென்று பார்க்கையில் சீகாழியில் தோணியப்பராகிய உமாபாகர் பெரியநாயகியுடன் எழுந்தருளியிருக்கும் திருக்கோலத்தை அங்கே கண்டார். உடனே, "மைம்மரு பூங்குழல்" என்ற திருப்பதிகம் பாடியருளினர். ஒவ்வொரு பாட்டிலும் "சீகாழியில் உள்ள கோலம் வீழியில் திகழ்ந்தவண்ணம் என்ன வியப்பு!" என்பதை அமைத்துப் பாடியருளினர். பிறகு சீகாழியிலிருந்து வந்தவர்களுக்கு, "காழிப் பிரானே இங்கு எழுந்தருளிக் காட்சி தந்துவிட்டார். ஆதலின் இப்போது நான் அங்கு வரவில்லை" என்று சொல்லி அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பினர்.

திருநாவுக்கரசரும் சம்பந்தரும் திருவீழிமிழலையில் தங்கியிருக்கும்போது, எங்கும் மழையின்றிப் பஞ்சம் உண்டாயிற்று. மக்களையும் விலங்குகளையும் பசி நோய் பற்றியது. அது கண்டு சம்பந்தர் மிக வருந்தினர்.

சிவபெருமான் அவருடைய கனவில் எழுந்தருளி, "பசி நோய் சிவனடியார்களைத் தாக்காவண்ணம் நித்தமும் உங்கள் இருவருக்கும் ஒவ்வொரு காசு அளிப்போம். அவற்றைக் கொண்டு அடியார்களின் பசிப் பிணியை நீக்கலாம்" என்று அருளினன். அடுத்த நாள் முதல் திருக்கோயிலுக்கு

ஏழிசையால் நின்னை யிறைஞ்சுகின்ற மெய்யடியார்
வாழியென்றே நாளும் மகிழ்ந்தேத்தி வாழ்வேனே

முன் உள்ள பீடத்தில் கிழக்கே ஒரு காசும் மேற்கே ஒரு காசும் இருக்கக் கண்டனர் நாயன்மார் இருவரும். கிழக்குப் புறமுள்ள காசைச் சம்பந்தர் எடுத்துக்கொள்ள, அப்பர் மேற்குப் புறமிருந்த காசை எடுத்துக் கொண்டார். அவற்றை மாற்றிப் பண்டங்கள் வாங்கச் செய்து யாவருக்கும் உணவு அளித்து வந்தார்கள்.

அப்பர் சுவாமிகள் மடத்தில் தக்க காலத்தில் எல்லோருக்கும் உணவு அளித்தார்கள். சம்பந்தர் மடத்தில் சிறிது தாமதம் ஆயிற்று. அதனை அறிந்த பிள்ளையார், "இந்தத் தாமதம் எதனால் விளைந்தது?" என்று விசாரித்தார்.

"சிவபெருமான் திருவருளால் வரும் படிக்காசைக் கொண்டு சென்று பண்டங்களை வாங்கும்போது நாங்கள் கொடுக்கும் காசு வாசிபட வேண்டும் என்று கடைக்காரர்கள் சொல்கிறார்கள். நாவுக்கரசர் பெறும் காசை உடனே வாங்கிக் கொள்கிறார்கள்" என்று அமுது சமைப்பவர்கள் கூறினார்கள். அது கேட்ட ஞானசம்பந்தருக்குச் சிந்தனை கிளர்ந்தது. 'சிவபெருமான் நமக்கு அருளிய காசு எளிதிலே செல்லாமல் இருக்க, மற்றொரு காசு உடனே செல்லக் காரணம் என்ன? உழவாரப் பணி செய்து உழைக்கும் பெருந் தொண்டினால் அப்பர் பெறும் காசு அது. அதனால்தான் அதற்குச் சிறப்பு அதிகமாயிற்று. இனி எம்பெருமானிடம் சென்று இந்த வாசி தீர வேண்டுமென்று முறையிட்டுக் கொள்வேன்' என்று எண்ணி மறுநாள் திருக்கோயிலுக்குச் சென்று, "வாசி தீரவே, காசு நல்குவீர்" என்ற திருப்பதிகம் பாடியருளினார்.

அதுமுதல் அவருக்கும் நல்ல காசு கிடைத்தது. கடை வீதியில் அதைப் போற்றி வாங்கிக் கொண்டு பண்டங்களைத் தடையின்றி அளிக்கலாயினர்.

பஞ்சம் நீங்குமளவும் அங்கே இருவரும் தங்கியிருந்தனர். அப்பால் எங்கும் மழை பொழியப் பயிர் விளைந்தது; பசிப் பிணி நீங்கியது.

முயலகனை யூன்றும் முதலே! உனதருளால்
மயலகன்று வாழ வழியும் உளதேயோ

முருகனடியார்: 23

கட்டபொம்மர் கால்வழி

(ரசபதி)

முதல் பொம்மன்

பல்லாரி நாட்டில், வாடிக் கோட்டை என்று ஒரு வளநகர். சிறந்தவர் அங்கிருந்த ஒரு சிற்றரசர். பால்ராஜர் என்பது அவர். பெயர். பாரியின் பெயர் விரை. அவர்கட்கு எழுவர் மக்கள் இருந்தனர். தங்கக் கட்டியின் வயிற்றில் சிங்கக் குட்டிபோல், எட்டாவது பிள்ளையொன்று பிறந்தது. பொலிவு மிக்க அவன் பெயர் பொம்மன்.

கால வேற்றுமையால், மழையைப் பயிர்கள் மறந்தன. குடிகள் மிடியால் குமுறினர். பிற நாடுகளில் குடியேறினர். அரசு குலைந்தது. கவலை வளர்ந்தது.

அந்நாளில் மன்னர் மன்னன் ஒரு மகம்மதியன். மாபெரும் அழகுடைய பால்ராசர் மகளை, வலிந்து மணக்க அவன் விரும்பினன். அதற்கென்றே, போக்கிரிகள் சிலரைத் தூது போக்கினன். யோசிக்கிறேன்; அவகாசம் வேண்டும் என்று போக்குக் காட்டி, பால்ராசர் அவர்களைப் போக்கினர்.

மகம்மதியனுக்கா? மகள் கொடையா? அரசழியினும் பாதகம் இல்லை; மரபழிய வாழேன் என்று பால்ராஜர் மனம் கொண்டார். உறவு முறையாருடன் கலந்தார். ஒரு முடிவிற்கு வந்தார். மக்களும் பந்துக்களும் தொடர, நள்ளிரவில் ஊர் விட்டு வெளிப்பட்டார். தென் திசை நோக்கி நடந்தார்.

தென்னாட்டில் உள்ள மணியாச்சிக்கு வடகிழக்கில், சாரலும் ஏரியும் சார்ந்தது சாலிகுளம். குடிசைகள் பல அமைத்து, அந்த இடத்தில் குடியேறினர்.

பாலன் பொம்மனுக்கு வயது பதினறு. அஞ்சா நெஞ்சம்; ஆண்மை யுடைமை; தமிழும் தெலுங்கும் அறிந்த தகுதி; சிலம்ப வித்தையில் சிறந்த தேர்ச்சி. இத்தனையும் கொண்ட பொம்மனைப் பார்த்து, உள்ளம் களித்தனர் உறவினர்.

ஒரு நாள் நள்ளிரவு. எங்கெங்கேயோ கொள்ளையிட்ட பொருளுடன், கள்ளர்கள் விரைந்து நடந்தனர். வேற்று அரவம் கேட்டு

கல்வியொடு கேள்வியிரு கண்ணெனனும் மேலோர் தாள்
புல்லி யவர்நெறியிற் புகுந்துறைவ தென்றேயோ

விழித்த பொம்மன், எழுந்து வந்தான். அவர்கள் எதிர் நின்றான். ஆரம்பத்தில் அஞ்சிய அவர்கள், இளம்பிள்ளை யென்று அறிந்து தெளிந்தனர். தடியால் ஒருவன், பொம்மன் தலையில் தட்டினான். அவ்வளவுதான்!

கொதித்து பொம்மச் சிங்கம் குதித்தது. அடித்த தடியை வெடுக்கென்று பிடுங்கி, வலசாரி இடசாரி மாறி வந்து, பளார், மளார், டம், டும், தடால், பட் பட் என்று உருத்து மோதினான். பன்னிரு திருடரும் மண்ணில் உருண்டனர். அதன் பின், அக் கள்ளரை மரத்தில் கட்டினான். உரத்துக் கூவி உறவினரை எழுப்பினான். விரைந்து வந்த அவர்கள், வினைவறியாது விழித்தனர். கள்ளர் கவர்ந்த பொருள்கள், எதிரில் மின்னியிருந்தன.

மரியாதையாகக் கேட்கிறேன்! இவைகள் எவர் எவர் உடைமை? ஒளியாமல் சொல்லுங்கள்! உங்களை விடுவிக்கிறேன் என்று, உக்ரமாகப் பொம்மன் உரைத்தான். எண்ணம் சிதைந்த கள்ளர்கள், உண்மையை யுரைத்தனர். உறவினர் மூலம், பொருளை யிழந்து வருந்தி யிருந்தாரை வருவித்தான். உரியவர் இடத்தில் பொருள்களை ஒப்படைத்தான். இவன் நலம் கண்ட கள்ளர்கள் நாணினர். இப்பாவத் தொழிலை இன்றோடு விட்டு விடுங்கள் என்று, அவர்கட்கு அறவுரை கூறி அனுப்பினான்.

புனிதன் என்று, ஊரவர் பொம்மனைப் புகழ்ந்தனர்; வீரன் என்று விரும்பி யேத்தினர். நிலைமை குன்றி வந்த இடத்தில், உலகம் அறிய, தம் பெருமையை உயர்த்திய பொம்மனை நோக்கிப் பெற்றோர் பூரித்தனர். கட்டாண்மை யுடைய அவனை, உறவினர் கெட்டி பொம்மு என்றனர். கெட்டி பொம்மு, வரவர கட்ட பொம்மு ஆயினான்.

பாண்டியர் மரபைச் சேர்ந்த ஜக வீரபாண்டியன், அருமையான வீர பாண்டிய புரத்தை ஆண்டவன். நலம் சிறந்த அவன் ஆட்சியைக் கைப்பற்ற, குறுநில மன்னர் சிலர் குறுகுறுத்தனர். வரி செலுத்த மறுத்தனர். படை திரட்டினர். எதிர்க்க வந்தனர். மூவாயிரம் வீரர்கள், எதிரிப் படையில் இருந்தனர்.

எதிர் பாராத இதனால் அதிர்ச்சி யடைந்த வீர பாண்டியர், கட்ட பொம்மன் உதவியை வேண்டினர். சிறு படைக்குத் தலைமை தாங்கிய கட்ட பொம்மன் எதிர்ப்பால், பகைவர் தலைகள் உருண்டன. கைகள் அறுந்தன. கால்கள் முறிந்தன. எஞ்சியவர் ஓடி ஒழிந்தனர்.

வில்லடியும் கல்லடியும் வீசு பிரம்படியும்
சொல்லடியும் தந்தார்க்குச் சுகந்தந்த தென்னேயோ

மன்னர் அறிந்து மகிழ்ந்தார். அரண்மனையில் பொம்மனை அழைத்து, பரிசில் பல தந்து பாராட்டினர். அன்று முதல், இருவரும் உடலும் உயிருமாக நட்புக் கொண்டனர். இடையில் ஒன்பது ஆண்டுகள் உருண்டு ஓடின.

அரசர்க்குச் சந்ததி யில்லை. காப்பான் குடிகளை என்னும் நம்பிக்கையால், கட்ட பொம்மனிடம் உரிய அரசை ஒப்புவித்து, வீடு பேறு எய்தினர் வீரபாண்டியர். ஆட்சிப் பீடத்தில் ஏறிய கட்ட பொம்மன், குடிகள் உள்ளம் குதூகலிக்க, அருமையாக அரசாண்டான்.

அவனுடைய படைவீரர் சிலர், ஒருநாள் காட்டில் சென்று வேட்டை யாடினர். அங்கு எதிர்த்த ஏழு நாய்களை, விரட்டி யடித்தது ஒரு முயல். வெட்கி மீண்ட வீரர்கள், வேந்தனிடம் செய்தியை விளம்பினர். அது, வீர மண்ணில் உதித்த விளைவு என்று, களித்து உரைத்தான் காவலன்.

அக்காட்டை அழித்தான். அங்கு ஒரு கோட்டை கட்டினன். அழகான நகர் ஒன்றை அமைத்தான். அதற்குப் பாஞ்சாலங் குறிச்சி யென்று பெயரிட்டான். பாஞ்சாலன் என்பது அவன் பாட்டன் பெயர். இது கி. பி. 110-ஆம் ஆண்டின் ஆதி கட்ட பொம்மன் வரலாறு.

ஜெகவீர கட்டபொம்மன்

கொடைக் கொண்டலான கட்டபொம்மன் மனைவி வெள்ளையம்மை. அவர்கள் பின் வந்த சந்ததியார், தம் பெயருக்குப் பின் கட்டபொம்மன் எனும் சிறந்த பெயரைச் சேர்த்துக் கொண்டனர். இந்த வரிசையில், நாற்பத்தாறுவதாக அரியணை யேறியவர் ஜெக வீரக் கட்டபொம்மர்.

அக் காலத்தில், தடி யெடுத்தவரே தண்டலாளர். ஒவ்வொரு கிராமத்தும் ஓராயிரம் குழப்பம். நள்ளிரவில் கள்ளர்கள் செய்யும் அட்டூழியங்கட்கு அளவில்லை.

திடீரென்று ஒரு வைக்கோல் போர் பற்றியெரியும். திகுதிகு என்று அடுத்த வீதியில் ஒரு வீட்டில் நெருப்பு. ஊர் மக்கள் ஓடுவர். தீயணைக்கும் செயலில் திரள்வர். நெருப்பை அணைப்பர். வீடு திரும்புவர்.

ஐயோ! அவர்கள் வந்து கண்டது என்ன? ஒரு வீட்டில் பெட்டிகள் திறந்திருக்கும்; மற்றொரு வீட்டில் பழ

அன்பர் செயலை அதிகம் உவக்கின்ற
இன் பேநீ என்பால் எழுந்தருளல் என்றேயோ

கலங்கள் உடைந்திருக்கும். அவைகளில் இருந்த பொன்னும் பொருளும் கொள்ளை போயிருக்கும். கண்ணீர் பெருக்கி மக்கள் கதறினர்; எங்கும் இந்த ஏக்கம்.

ஜக வீரக் கட்டபொம்மர், தகுதி மிக்க ராஜ தந்திரி. ஊன்றி இவைகளை உணர்ந்தார். விறுவிறுத்தார். வீறு கொண்டு வெளிப்பட்டார். தீரம் மிக்க சிலரைத் திரட்டினர். மட்டரகமான வரை மடக்கினர்; கள்ளர்களை அடக்கினர். இனிய அறச்சாலை களை எழுப்பினர். கலாநிலையம் பல கட்டினர்; பஜனை மண்டபம் பல பரப்பினர். அதன் பயனாக, நாட்டில் பெருகிய அமைதி பிறந்தது. குடிகள் எங்கும் குதூகலித்தனர்.

ஜகவீர கட்டபொம்மர், பரம முருக பக்தர். ஆராத ஆர்வத்தால், திருச்செந்திலானை ஆராதித்தார். ஏராளமான ஆபரணங் களை, எம்பெருமானை அலங்கரிக்க அளித்தார். அவைகள், இன் றும் கோயில் கருவூலத்தில் இருக்கின்றன.

உதய காலம், உச்சிக்காலம், நயினர் கட்டளை, நாளபிஷேகம், நிறையலங்காரம், நைவேத்தியம் நலமுற நடைபெற, அவர் உதவிய பொருட்கு அளவில்லை. எழுதியுள்ள நிலபுலன்கள், செந்தில் பண்ணை யென்று இன்றும் சிறந்திருக்கின்றன.

உச்சிக்கால வழிபாட்டை உணர, செந்திலில் இருந்து பாஞ்சா லங்குறிச்சிவரை, அரிய நகரா மண்டபங்களை அமைத்தார். பூசை முடிந்ததும், உயர்ந்து முதல் நகரா ஒலிக்கும்; அம் முழக்கின் பின், அடுத்த பேரிகையை அடிப்பர்; அதன் பின் மூன்றாவது முரசு முழங் கும்; இப்படியே வழிவழி, இறுதி ஒலி பாஞ்சாலம் குறிச்சியில் படபடக்கும். அது கேட்ட பிறகுதான், பகலுணவு உண்பர் அப் பார்த்திபர். பூஜையின் முன்னர், மன்னர் போஜன சிந்தனையே போத்திமார் நினைவிற் பொங்கியெழும். அதனால், அவர்கள் காலம் தாழாது வழிபாட்டைக் கருத்தொடு நிகழ்த்துவர்.

வேந்தர் உள்ளன்பின் உறுதியை, இதன் மூலம் அன்றைய உலகம் உணர்ந்து மகிழ்ந்தது. அந்த நகரா மண்டபங்கள், இன் றும் சிதிலமாகி யிருக்கின்றன. திங்கள் கிழமையன்று, இலை விபூதி, பாஞ்சாலம் குறிச்சிக்குப் பரிந்து வரும். அதைக் கொணர, ஆறு அஞ்சல் பரிகளை அமைத்திருந்தார் அரசர்.

சோதனைச் சூழல்

வைதிக சீலம் வழுவாதவர் ஒரு அந்தணர். கனிந்த மனத்தர் அவர் பெயர் **காசிபர்.** பற்றற்றான் பற்றையுடைய பக்தர். வாழ்

வில்வ தளம் சிந்தியிட்ட வீறெண்ணி யோர்முசுவை
வல்லரச ளுக்கியவுன் வண்மையருள் வாழியரோ

வாங்கு இளமையில் வாழ்ந்தவர். முன்னைய வினையால், இரு கண்களும் ஒளியை யிழந்தன. அதனால், முதிர்ந்து சோகம் மூண்டது. மருத்துவர்களும் கைவிட்டனர்.

ஐயோ! குருடன் ஆயினேனே! கண் தெரிந்த காலத்தில் செந்தில் கந்தனைச் சேவிக்காது போனேனே! என்று கருதும்போதெல்லாம் கண்ணீர் சிந்தினர். பூதகணமும் நவ வீரரும் புடைசூழ, நம்பன் முருகன் நடமாடிய புனித அத்தலத்துப் புழுதியிலேனும் புரளவேண்டும் என்னும் தாபம் எழுந்தது. உறவினர் ஒருவர் ஆதரவுடன் புறப்பட்டார். செந்தில் எல்லையில வந்தார். சிலிர்த்தது மேனி.

செவ்வேள் செல்வமே! தகர் ஊரும் தரும துரையே! பிரணவ நாதப் பேராளா! பிரபோ! என்று விம்மியழுது வீழ்ந்தார். மனம் சலிக்கும் வரை, முருகா! முருகா! குமரேசா என்று, கூவி உருண்டு குதூகலித்தார். அப்பா! என் ஜென்மம் சாபல்யம் எய்தியது என்று, அழுது கதறி அலமந்தார்.

முருகன் கோயிலை முறையாக வலம் வருவோம்; எழுந்திரும் என்று எழுப்பிச் சென்றார், உடன் துணை வந்தவர்.

நியதியாக, வதனாரம்ப தீர்த்தத்தில் நீராடினர். நெற்றிக்கும் நீராடினர். வரதன் ஆலயத்தை வலம் வநதார்.

முதல்வா! முருகா! சிறக்க உன்னைச் சேவிக்க முடியாதபடி, அரிய என் கண்கள் அவிந்தனவே! என் தலையில் பிரமன் இப்படி எழுத, நான் என்ன பாவத்தைச் செய்தேன்? எங்குமுளா நீ, ஏங்கும் இதயம் அறியாயா? எட்டுக் கண்ணனைக் குட்டிச் சிறையிட்ட பன்னிரு கண்ணுடைப் பகவா! கருணை மிக்க நீ, என் கண் திறக்க மாட்டாயா என்று கதறினார். காலையும் மாலையும், பிரார்த்தனை இப்படியே பெருகியது.

விநயம் வெளிப்பட, உருகுமவர் விழியருவியில், நீந்தி வினையாடும் அந்த நிமலன் அருளால், ஒருநாள் பளிச் சென்று தெரிந்தது ஒரு கண். என்ன் அதிசயம்!

கண்டவர் வியந்தனர். கண் பெற்ற தொண்டரோ, ஹரஹர முருகா ஹரோஹர! சண்முக நாமமே கற்கண்டு! அதைப் பாடும் அவர்க்குப் பயன் உண்டு என்று ஆடிப் பாடி அகம் உருகுகிறார். அன்றுமுதல், ஆறுமுக துரையை மென்மேலும் ஆராதித்தார். வரதா! தெய்வ பரதா! மயிலேறும் சரதா! மற்றொரு கண்ணும் மலர அருள் என்று, பன்னாளும் ஏத்திப் பணிந்தார்.

நெய்நக்கத் திரியேறத் தீபத்தில் நேரஒளி
செய்தஎலி மாபலியாச் செய்தஅருள் வாழியரோ

ஒருநாள். உச்சிக் கால பூஜை நடைபெறுகிறது. கணகண என்ற மணி ஒலி; முரசுகள் பெரிது முழங்குகின்றன. ஹர ஹர என்று பக்தர்கள் ஆலிக்கின்றனர். உள்ளம் காசிபர்க்கு உருகுகிறது.

படபடக்கிறார் எதிரில் ஒரு பக்தர். பொன்னிறமான அவர் மேனி மின்னுகிறது. உருத்ராக்கம் மார்பில் உருள்கிறது. ஆவேசத்தால் குதித்து ஆடுகிறார். அதிர்கிறது எவர் மனமும்.

கண் தெரிய வேண்டுமானால், காசிபா! அகத்தில் எம்மையறிந்து, புறத்தில் அன்பொடு பூசிக்கும் கனிந்த அன்பன் கட்டபொம்மனைப் போய்க் காண்! என்று குரல் கொடுத்து மலையேறியது ஆவேசம். அதைக் கேட்டு, பலர் விம்மிதம் எய்தி வியந்தனர். கட்டபொம்ம அரசரை, எளிய என்னால் காண இயலுமா என்று, கண் மழை சிந்தினர் காசிபர்.

பின்புறத்தில், திமுதிமு என்று ஓடி வந்தனர் சிலர். திடுக்கிட்டுக் காசிபர் திரும்பினர். எதிர்பாரா நிலையில் அன்று, கட்டபொம்மர் கந்தனைச் சேவிக்க வந்திருக்கிறார். அவரைச் சேவிக்க அளவிலாதவர் அடர்ந்து மொய்த்தனர். அந்த ஆரவாரம் இதி என்று அறிந்தார் காசிபர். கட்டளை பிறந்தது; அதே நேரத்தில் அரசரும் வருகிறார்; அருளாடல் என்பது இதுதானோ? என்று அதிசயித்தார். எனினும், அளவிலாப் பரிசனங்கள் சூழ்ந்த அரசரை, அணுக முடியாமல் தவித்தார்.

வந்த மன்னர் வழிபாடு முடிந்ததும், தக்க ஒரு இடத்தில் சென்று தங்கினர். உண்டி கொண்டார். மாலை நேரம்.

காசிபர்க்குப் பிறந்த கட்டளை, பிறர்மூலம் காவலர் செவிக்கும் எட்டியது. மெய் சிலிர்த்தது. திகைத்தது மனம். வியந்து உவந்தார் வேந்தர்.

இது ஆறுமுகத்தின் அருள். எளிய என்னிடத்தில் எச் சிறப்பும் இல்லை என்று, வரம் பெற்ற அவ் வேதியரை வரவழைத்தார். வந்த அவரிடம், அஞ்சாதீர்! பரமன் அருளை நாளை பார்ப்பம் என்று, ஆறுதல் கூறினர். அவருடைய உணவிற்கும் படித்தரம் உதவினர்.

தான் மட்டும் இரவு உணவு கொண்டிலர். விரத சீலராய் விழித்து, உமையாள் சேயின் ஆறெழுத்தை உருவேற்றியிருந்தார். மறுநாள் காலை, முருக வழிபாட்டை முடித்தார்.

வாய்ச்சிழைத்த நூல்கோயில் வாள்சிலந்தி செய்யஅதைக்
கோச்செங்கண் சோழனெனக் கொண்டஅருள் வாழியரோ

கட்டளைப்படி காசிபர் கண் திறக்கவில்லையேல், புனித வாக்குப் பொய்த்தது என்று, பொல்லார் கூறப் பொறுக்கமாட் டேன்! உயிர் மாய்த்துக் கொள்வேன் என்று வீறிட்டுக் கூவி, வாளும் கையுமாக வெளிப்பட்டார். காவலர் மனநிலை, எவர்க் கும் கவலையை அளித்தது. அனைவரும் தொடர, ஆலயத்தை அடைந்தார். முன் வந்தார் காசிபர். இருவரும் சந்நிதியில் இருந் தனர்.

ஆறுமுக ஐயா! தேறுமுகம் தா! வீறு பெறும் தேவே! பார் வதியார் பாலா! சிவாகமம் சொல் சீலா! வானவர் கோதை கான வர் மாதை மணந்தோனே! தெய்வப் பெருமா குமரேசா! முதல்வா! நின் திருவருள் முன்னிற்பதாக என்று கூவி, கட்ட பொம்மர், காசிபர் கண்ணைக் கையால் மூடினார். பார்த்தவர் இதய மெல்லாம் படபடத்தன.

ஓம் ஒளியோனே! உள்ளொளிப் பிழம்பை உதவுக, ஓம்! ஓம் என்று ஓதி உருகி, பரவசம் எய்தி வைத்த கையை எடுத்தார். என்ன வியப்பு! அடுத்த கண்ணும் பிரகாசிக்கின்றது. முதல்வன் அருளால் முன்னொரு கண்ணும், கட்டபொம்மர் பிரார்த்தனையால் அடுத்த கண்ணும் பிரகாசித்ததை எண்ணி எண்ணி, காசிபர்க்கு உள்ளம் பாகாய் உருகியது. கண்டவர் எல்லாம் இன்பம் கொண் டனர். ஹரா ஹரா நாதம் அதிர்ந்தது. தூய வேந்தரை எவரும் தொழுதனர். ஆநந்தக் கண்ணீர், மாலை மாலையாய் மார்பில் ஒழுக, ஆரா அன்பால் அரசர் பெருமான், ஆறுமுகத்தைப் போற்றிப் பணிந்து புளகித்தார். அன்று தலத்தில் இருந்த அடியவர்க்கு, அரசர் மகேச பூசை நடத்தி மகிழ்ந்தார். கண்பெற்ற அந்தணர்க்கு, மங்கை ஒருத்தியை மணந்து வாழ்கென, அளவிலாப் பொருளை அளித்து அனுப்பினார். அதர்மம் உலகில் அதிகரிக்கும் காலத்தில், அதில் சிக்கும் என் சந்ததிக்கு, ஆகாமியம் அதிகரிக்காதபடி, அத்தா! அவர்களை அழித்துவிடு! வரத உன் தாள் மலரில் வாழுவை முருகா! என்று பலநாளும் ஏத்திப் பரவினர்.

பக்திமிக்க இந்த ஜகவீர பாண்டியர்க்கு, மூன்று பிள்ளைகள, இரு பெண்கள் பிறந்தனர். வீரபாண்டியர், ஊமைத்துரை, துரைச் சிங்கம், ஈச்சுர வடிவு, துரைக்கண்ணு என்பது அவர் கள் பெயர்.

47-ஆம் பட்டமாக, தன் முதல் மைந்தரை அரியணையில் ஏற்றி னார். ஆட்சியை அவரிடம் அளித்தார். செந்தில் கந்தனை வந்தித் திரு! இதுவே என் உபதேசம் என்றார் ஜக வீரபாண்டியர்.

அழுதபிள்ளை பால்குடிக்கும் என்பார், அதுதன்னை
கழுமலத்தார் முன்காட்டும் கண்ணருள் தான் வாழியரோ

வீர சக்கம்மாளை மணந்த வீர பாண்டிய கட்டபொம்மர், தந்தையைப் போல், செந்தில் ஆண்டவன்பால் அளவிறந்த அன்பை யுடையவர்.

அன்பின் அனுபவம்

ஒரு மாசி மாதத்தில், மனைவியுடன் சென்று, செவ்வேள் பெருமானைச் சேவித்தார். அங்கிருந்த நிலைக் கண்ணாடி முன் நின்றார். தான் அணிந்திருந்த ஆபரணங்கள், விளக்கொளியில் பளபள என்று மின்னின.

நாணினர். மனம் நடுங்கியது. உயர்ந்த இவ் வணிகள், எம் பெருமானுக்கே உரியன; தலைசிறந்த இவைகளை, நான் அணிவது தகுதியல்ல என்னும் நினைவு எழுந்தது. கனந்தங்கிய அவைகளை, உடனே கழற்றினார். சந்நிதியில் அப்போதே சமர்ப்பித்தார். விளைவை உணர்ந்த வீர சக்கம்மாள், விறுவிறு என்று தன் அணிகளைத் தானே கழற்றினள். இரு தேவியர்க்கும் இவை உரியவை என்று எடுத்துக் கொடுத்தாள். பக்தர்கள் இச் செயலைப் பார்த்தனர். சிறந்த அவர்கள் மேனி சிலிர்த்தது.

மற்றொரு சமயம், வெறும் மேனியாயிருந்த மனைவிக்கென்று வீரபாண்டியர், அதிக விலையேறிய இரத்தின ஆரம் ஒன்றை அமைத்தார். பல வேலைப்பாடு அமைந்தது, அதனில் இருந்த பதக்கம். அதை மனைவிக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

அன்று இரவு அவர் கனவில், தூய செந்திலான் தோன்றினன். பாண்டியா! உன் மனைவிக்கு உயர்ந்த பதக்கம் உதவினை! என் தேவி கதி என்னேடா? பதக்கம் தனக்கும் வேண்டும் என்று, அவள் என்னைப் படாதபாடு படுத்துகிறாளே! உன்னிடம் இருப்பவள் மறத்தி; என்னிடம் இருப்பவள் குறத்தி. இந்த நகைப் பயித்தியம் கொண்ட பெண்கள் தொல்லையே பெரிய தொல்லை! அரிய விலைப் பதக்கத்திற்கு ஆண்டி நான் என்ன செய்வேன்? என்னையும் என் பக்தர்களையும் கண் காணிப்பவர்கள், உன்னைப் போன்ற உத்தமர்கள் தானே!........

கனவு கலைந்தது. வேந்தர் விழித்தார். வியர்த்தது மேனி. திருச்செந்தில் திசை நோக்கி வீழ்ந்து வணங்கினார்.

வேத முதலே! நங்களை யாளும் நாதனுன நீ, அகில உலகங்களை யும் ஆக்கி யளிக்கும் அதிபனுன நீ, விரும்பி இப்படி எங்களோடு விளையாட, நாங்கள் என்ன தவம் செய்தோமோ? என்று மேவிட்ட

பாடிப் பரவுகின்ற பாலரு வாயர்க்கு
ஈடிலாப் பல்லக்கை யீந்தஅருள் வாழியரோ

அன்பால் வீறிட்டார். திடுக்கிட்டு எழுந்தாள் அவர் தேவி. இன்பக் கண்ணீர் இறைத்து, மெய் புளகித்து நிற்கும் மேதகு கணவரை ஏறிட்டு நோக்கினள்.

ஸ்வாமி! என்ன இது? என்று விநயமொடு வினவினள். கண்ட கனவை, விக்கி யழுதபடி விளக்கினர் வீரபாண்டியர்.

அப்படியா! கிருதார்த்தர் ஆயினோம்! நனவிலும் கனவிலும் நமக்கு அருளும் அம்மான் அருட்கு, எது செய்தாலும் ஈடாமோ என்று சொல்லியபடியே, இரத்தினரத்தை எடுத்தாள்.

நியதியொடு அதை இருவரும் நீராட்டினர். ஒரு பெட்டியில் இட்டனர். பல்லக்கில் ஏற்றினர். செந்திலுக்கு அனுப்பிச் சிந்தை மகிழ்ந்தனர்.

இவைகளை யறிந்த ஜகவீர பாண்டிய கட்டபொம்மர், செந்திலுக்கு வந்தார். வழிவழி என் மக்கள், முருகா! உனது அருள் பெறு மக்களானமை உணர்ந்தேன். உலக முழுவதும் அறநெறி தவறும் காலத்தில், என் குடும்பத்தை இவ்வுலகில் அழித்துவிடு! அந்த உயிர்களை உன் அடி நிழலில் ஆட்படுத்திக் கொள் என்று பிரார்த்தித்தார். ஊர்க்குத் திரும்பினார். சிலநாள் இருந்தார். ஒரு நாள் செவ்வேள் பெருமான் சேவடி யடைந்தார்.

சாந்தி நிலை

வர வர, நாட்டு மன்னர்கள் ஒவ்வொருவரும் சுயநலத்தில் சுழித்தனர். அவரைத் தழுவினர் அளவிலாதவர். கிழக்கிந்தியக் கம்பெனி, கஞ்ச வஞ்சத்தை நயந்தது. வீரபாண்டிய கட்டபொம்மரை, பல வகையில் காட்டிக்கொடுத்து, சிலர் பரிபவம் செய்தனர். ஆனமட்டும் முயன்று அறம் காத்த வீரபாண்டியக் கட்டபொம்மர், காலம் வரும்; தமது குற்றங்களை மக்கள் உணர்வர்; முருகவோ முருகா! அந்நாளில் அவர்கட்கு அருள் செய் என்று பிரார்த்தித்தார். வீர மரணம் எய்தினர். ஆண்டவன் அடி நிழலே ஆதாரம் என்று இன்பம் கண்டது அவர் ஆன்மா. அவர் தம்பியரும் தேவியரும், அவர் நிலையையே பின்பற்றி, பெருமான் அளித்த பேறு பெற்றனர்.

வாழ்க முருகன் அடியவர்!

ஓம்

கோலக்காவில் நாதம் கொண்டெழுந்த தாளமளி
சீலத்தை யெண்ணுதொறும் சிந்தைமகிழ் கின்றதுவே

மகத்தான பரிசு

(கோமதி ராஜாங்கம்)

அண்ணு, கன்னையாவுக்கு நாளை என்ன பரிசு கொடுக்கப் போகிருய்; கோபபாலர்களில் மிக்ச் சிறியவனும், சியாம மோகன னுக்கு மிக மிகப் பிரியமானவனுமான துகாராம் ஸ்ரீபலராமனிடம் வினவினுன்.

நாளை ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி. வ்ரஜ பூமிவாசிகள் அனை வரும் அன்று கன்னையாவுக்குத் தங்கள் தங்களால் இயன்ற பரிசு அளிப்பது வழக்கம். ஒவ்வொருவரும் கற்பனை செய்தனர். நாம் அளிக்கும் பரிசு மற்றவருடையதை விட மேன்மையானதாக இருக்க வேண்டுமென்றும், கன்னையாவுக்கு மிகுந்த திருப்தியை அளிக்க வேண்டுமென்றும் எண்ணம்.

மாதக் கணக்காக, வருடக் கணக்காக கோபபாலர்களுக்கு இதே கவலை. இப்பொழுது நாளை, கன்னையாவுக்குப் பிறந்த விழா. இன்று துகாராம், பலராமனிடம் இதை வினவினுன். பாவம் அவன் மனதில் பலராமன் கொடுக்கும் பரிசைவிட தான் கொடுப் பது மேலானதாக இருக்க வேண்டுமென்று எண்ணம்.

மது, குறும்புக்காரப் பையன். "நான் கொடுப்பது என்ன வென்று சொல்லட்டுமா;" என்ருன்.

"ஆமாம், நீ கொடுப்பாய்." துகாராம் அவனை நையாண்டி செய்தான். "உன்னிடம் என்ன இருக்கிறது கொடுக்க. கேவலம், சுகிபவ, என்ற ஆசி இனுமாகக் கிடைக்காது; ஆமாம்." மது இவ்வி தம் கூறும்போது அவன் குரல் கம்பீரமாக ஒலித்தது. "நமக்கு தக்ஷிணையும் கொடுத்து வந்தனம் செய்தால்தான் நாம் ஆசீர்வதிப் போம்" என்ருன்.

"இல்லாவிட்டால்?" இப்பொழுது கன்னையாவே குறும்புச் சிரிப்புடன் குறுக்கிட்டான்.

"ஹூம்; ஹூம்; கேலியா செய்கிருய்;" முஷ்டியைப் பிடித்துக் காட்டினுன் மது.

"அப்பொழுது நாளைக்கு இம் முஷ்டியால் என்னைக் குத்து! அதுவே நீ கொடுக்கும் பரிசாக இருக்கட்டும்." கன்னையாவின் குறு நகை பெரு நகையாயிற்று.

மயல்பகையா காமல்தம் மன்மனை யீந்த
இயல்பகையார் ஞானம் இயைவதுவு மென்றேயோ

இக் கன்னியாவின் குணம்தான் எத்தனை விசித்திரமானது? பரிசுப் பொருளாக அடியும் குத்தும் வாங்கிக் கொண்டால் கூட அவனுக்கு அது ஸந்தோஷத்தையே அளிக்கும். இந்த நூதன மான குணமே காலம் சென்ற பின்னர் விளங்கிற்று. பாரத யுத்தத் தில் பீஷ்ம பிதாமகரின் அம்புகளைப் புன் சிரிப்புடன் தாங்க உதவி செய்தது போலும்!

"அவர்கள் கிடக்கிறார்கள் அண்ணா. நீ என்ன கொடுக்கப் பேசினாய்! அதைச் சொல்" என்று, பலராமனின் தோளைப் பிடித் துக் குலுக்கினான் துகாராம்.

"நான் சொல்லட்டுமா?" என்றான் கண்ணன், அண்ணனைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கொண்டே." அண்ணா இன்று அணிந்தி ருக்கும் புது வனமாலையையே நாளைக்கு எனக்குப் பரிசாகக் கொடுப்பான்!"

பலராம் என்ன பதில் சொல்வான்; இந்த ப்ருந்தாவனம் பூராவாகத் தேடினாலும் இவனுக்குக் கொடுப்பதற்கு நூதனமாக என்ன இருக்கிறது? இவனிடம் இல்லாதது எது? அவனுக்கு நாளை நாவல் பழம் நிறைந்த சிறு கூடையையோ, புல்லாங்குழலையோ எதைப் பரிசாக அளித்தாலும் அவனுக்கு மகிழ்ச்சியே. இன்று நான் அணிந்திருக்கும் மாலையையே நாளைக்குப் பரிசாகக் கேட்கிறான். அவனுக்குக் கொடுப்பதற்கு என்னிடம் என்ன இருக்கிறது?

துகாராமுக்குக் கோபம். இத்தனை தரம் கேட்டும் இவன் பதில் சொல்லவில்லை. சை. சை. என்று கன்னையாவிடமே திரும்பினான். "உனக்கு என்ன வேண்டும்" கண்ணா?" என்றான். "எனக்கு நீதான் வேண்டும்" என்றான் கண்ணன், சற்றும் யோசியாமல்.

"போடா." துகாராமுக்கு இப்பொழுது அழுகையே வந்து விட்டது. இந்தப் பெரிய பையன்களே இப்படித்தான். சும்மா கேலி செய்வது. நையாண்டி செய்வது. அவனுக்கு உதவியாக ஆலோசனை கூறினால் என்னவாம். நான் வேண்டுமாம் இவ னுக்கு. இதற்கு என்ன அர்த்தம்? நான்தான் எப்பொழுதுமே அவனுடையவனாயிற்றே.

"யாரப்பா நீ?" என்றான் துகாராம். இடுப்பில் சுற்றிய கந் தைத் துணி. தலையில் ஜடையெனத் திரிந்து புழுதி படிந்த கேசம். கன்னங்களில் அப்பொழுதுதான் வற்றிய கண்ணீர் தடம். இவ்

இளையான் குடிமாறர் ஈகைநிறை யன்பை
விளையச்செய்; மெய்ஞ்ஞான வேட்கைதா வித்தகனே.

வளவு பரிதாபமான, சோகமான, இத்தனை திகிலடைந்த இப்பால கன் யார்? ப்ருந்தாவனத்துக்கே இது ஒரு புது காக்ஷி.

சிறு பையன் துகாராமுவுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. ஓடிச் சென்று அவனைக் கையைப் பிடித்து இழுத்து, அவன் முகவாயை அன்புடன் தொட்டு நீ யாரப்பா? சொல்லு என்றான்.

அவன் ஏன் பேசமாட்டேன் என்கிறான்? கனவு கண்டு விழித் தது போல் ஏன் இப்படி மிரள மிரள விழிக்கிறான்? "யாரப்பா நீ? உன் ஊர் எது? ஊமையா நீ? உன்னை யாராவது அடித்தார்களா?" சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினான் துகாராம். தரித்திரத் தின் உயிரோவியமான அப் பையன், பாவம், வ்ரஜபூமியில் பிச் சைக்காரர்கள்கூட இவ்வளவு தீனமாக இருக்கமாட்டார்களே.

கம்ஸனின் சூழ்ச்சியால், ப்ருந்தாவனத்தில் நான்கு திசைகளி லும் சூழ்ச்சி நடக்கிறது. அநீதி நடக்கின்றது. அவன் ஏவலாட் கள், சுற்றுப்புறத்துக் கிராமங்களுக்குத் தீயிடுகின்றனர். மனிதர் களா நாம்? அக்கிராதர்களுக்குக் கேவலம் மூட்டைப் பூச்சிக் குச் சமானம். நேற்றே அக் கிங்கரர்களால் வீடு எரிக்கப்பட்டு, மாதா, பிதா சகோதரர்கள் கொல்லப்பட்டு, அரைத் தூக்கத்தில் விழித்துக்கொண்டு திக்கு திசை தெரியாமல் ஓடி வந்த 12 வயதுச் சிறுவனுக்கு, துகாராமின் கேள்விகள் குழப்பத்தையே விளைவித் தன. ஆபத்தில் இருந்து தப்பிய அச்சிறுவன், மரணதேவனின் கோரப் பற்களின் இடுக்கிலிருந்து நழுவிய அப்பாலன், எங்கு வந்தி ருக்கிறான்? எங்கு நோக்கினும் பனி முத்துக்களை சுமக்கமாட்டா மல் தலை வணங்கி நிற்கும் பசுமைப் புற்கள்; பழங்களும் புஷ்பங் களும் குலுங்கும் மரம். செடிகள், வெண்ணை, தயிர், பால், இவை களின் நறுமணம்; கந்தர்வர்களை யொத்த சிறுவர் சிறுமியர், எங் கும் வாத்திய ஒலி. இது கனவா? நனவா? பாவம் அநாதைச் சிறு வன் பேந்தப் பேந்த விழிக்கிறான்.

துகாராம் பரபரப்புடன் அவன் கையைப் பற்றினான். "நீ என் கூட வா. உனக்குப் பசிக்கிறதா? அழாதே. உனக்கு வெண்ணை தருகிறேன்" துகா தடுமாறினான். இப்பையனின் பயத்தை எவ்வி தம் நீக்குவது? அவனுக்குப் புரியவில்லை.

"கனு, கன்னு, இங்கு வாயேன். சட்டென்று ஓடி வாயேன்,' துகாராமின் கதறல், பிறந்தநாள் ஆனந்தமாகக் குழலூதிக் கொண் டிருக்கும் கண்ணன் செவிகளில் விழுந்ததுதான் தாமதம்.

நெற்றியில் நீறுகண்டு நீசனையும் போற்றிமதி
வெற்றியுறு மெய்ப்பொருளார் வீறெனக்கும் ஈவாயோ

கிளையில் சிக்கிக்கொள்ள தடுக்கி விழுந்ததையும் பொருட்படுத்தாமல் விழுந்தடித்து ஓடி வந்தரான் கன்னையா. துகா கூப்பிடுவது, கன்னையா வராமல் இருப்பதுவா; நன்றாகத்தான் இருக்கிறது.

“என்ன துகாராம், எனக்குப் பரிசு கொண்டு வந்திருக்கிறாயா? எங்கே? எங்கே? இவன் யார் தீனனாகக் காணப்படுகிறானே? இவனையா எனக்குப் பரிசாகக் கொண்டு வந்தாய்?” சொல்லிக் கொண்டே கண்ணன், கீழே மயங்கி விழப்போகும் அநாதைச் சிறுவனைப் பிடித்து மார்புற அணைத்துக் கொண்டான்.

பின்னால் பெருநடை போட்டு வீறாப்புடன் வரும் பலராமனைப் பார்த்துத் திரும்பினான் கன்னையா. “அண்ணா! இதோ, இதோ, இதோ பார் துகாராமனின் பரிசு! இப்பாலகனைப் பார்! இன்று வந்த பரிசுகளில் மகத்தான பரிசல்லவா இது” என்றான். நீல மணிக் கண்களில் கருணை வெள்ளம் ததும்பியது.

இக்கதை பாகவதத்தில் இருக்கிறதா வெனக் கேட்காதீர்கள். இது வெறும் கற்பனைக் கதை. ஸத்தியத்தின் அஸ்திவாரத்திலேயே கதை எழும்புகிறது.

கதையின் பலன் உங்கள் ஹ்ருதயத்தில் பதிகின்றதா? சியாமளன்தான் ஜீவர்களை மார்புடன் அணைக்கத் துடித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்குரிய பரிசு எது? தன்னைத் தானே சமர்ப்பணம் செய்வது தான் அவனுக்குகந்த பரிசு. இக்கதையின் அடிப்படை உண்மை இதுவே.

படைப்பிலே மாட்சி!

(எஸ். வி. ரமணி)

உலகில் பிறந்த மானிடரைக் கவரும் பொருள்கள் அநேகம் இருக்கின்றன. பொருள்களையும் மனிதனையும் படைத்தது இறைவனே தான். இதை மனிதனும் உணர்ந்திருக்கிறான். பகுத்தறிவின் காரணமாக, எல்லாவற்றையும் விட ஒரு படி மேலாக இருக்கும் மனிதன், மற்ற பொருள்களினால் கவரப்படுதல் சிருஷ்டி விந்தையே யாகும்.

திறல்கொண்ட பக்தரெதிர் போற்றாத தீயரெதிர்
விறல்மிண்டர் உள்ளம் விமலா அருளுதியோ

அதிலும், கார், நகைகள் நாகரிக சின்னங்கள் முதலிய வற்றை விரும்பினாலும் ஓரளவு நியாயமானது; ஆனால் சிருஷ்டி தத்துவத்திலே ஆண் பெண் என்ற இனப் பாகு பாட்டிலே ஒருவருக்கொருவர் மயங்கி மாளுதல் விந்தை யிலும் விந்தையே! படைப்புப் பொருளிலே ஒன்றைப் போல ஒன்று இருப்பதில்லை. அந்த அடிப்படைத் தத்து வம்தான் மனித சிருஷ்டியிலும் இறைவனால் செயலாக்கப் படுகிறது என்பதென்னவோ உண்மைதான். சற்று சிந்தித்து மனம் இந்த உண்மையை ஆராய்ந்தால் மேலும் தெளிவுபடும்.

அன்றன்றாட வாழ்க்கைப் புயலில் முக்குளித்து எழுந் திருக்கும் மக்களுக்குச் சற்றும் சிந்திக்க நேரமேது? நேர மிருந்தாலும் அலுப்பிலே, உழைப்பின் தேய்விலே கழிந்து விடும். அந்தக் கலைப்பு நேரத்தில் எந்தப் பொருளுமே, தங்களைப் போல் இல்லாத எல்லாமே, கவர்ச்சி மிகுந்த தோற்றத்தில் காணப்படும் அனைத்துமே, அவர்களுக்குக் கானல் நீராகத்தான் காட்சி யளிக்க முடியும். அதை நம்பி அடைய முயற்சி செய்பவர்கள் பலர்.

'எப்பொருளும் எக்காட்சியும் காண்பது உன் திரு வுருவே' என்று இராமலிங்க சுவாமிகள் கூறியிருக்கிறார். சிந்தித்த மனதிலேதான் தெளிவு பிறக்க முடியும். தெளி விலேதான் உண்மை விளங்கும்; உண்மையிலேதான் இறை வனின் திருவுருவைக் காண முடியும்; அந்தக் காட்சியிலே உள்ளம் ஒருமிக்கும்; உணர்வு ஒன்றும்.

இந்த நிலை யாவருக்கும் கிடைப்பது அரிது. கிடைத்த பெரியார்கள் இறைவனின சிருஷ்டிப் பொருள்களின் தன் மையை ஆராய்ந்து, ஒவ்வொன்றும் அதனதன் வளர்ச்சிக்கு உதவும் முறையிலேயே அதனதன் சிருஷ்டியும் ஏற்பட் டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். ஆண், பெண் என்ற இனப் பாகுபாட்டிலேயும் இந்த அம்சம் தனித்து விகசித

இறை கோவணத்திற்கே ஈடல்ல என்றெதையும்
நிறைசெய்து காட்டுமமர் நீதிமதி வந்துறுமோ

மாக விளங்குகிறது. பண்போடொத்த வாழ்க்கையிலே சத்தியமும், நேர்மையும், நெறியும், பக்தியும், ஈகையும் கடைப்பிடித்து, நன்மக்களை பெற்று, நாயகன் வாழ்வில் இரண்டறக் கலந்து, கடைசியில் இறைவன் அருள் பெற வழி காட்டியாக விளங்கவே பெண் இனம் படைக்கப்பட்டு இருக்கிறது.

இன்று நேற்று அல்ல. மண்ணைசை பிடித்த மன்னர் போரிட்ட காலத்துக்கு முதலே இந்தப் பெண் படைப்பு அம்சம் தலைகீழ்ப் பாடமாக இருந்து வருகிறது. இந்நிலையைக் கண்டு வருந்தாத மகான்கள் இல்லை. மாற்ற விழையாத' மதவாதிகள் இல்லை. காலத்துடன் போட்டி போட்டுக் கொண்டு இந்நிலையே படர்கிறது.

மாணிக்க வாசகர் ஓர் சொல்லம்பை மக்களுக்கு விடுக்கிறார். அதிலே மிகமிகப் பழமையான தெய்வீகமே இலக்காக அமைந்திருக்கிறது.

ஓர் அழகிய இல்லம். மினுக் மினுக்கென்று எரியும் காடா விளக்கு. அந்த விளக்கின் வெளிச்சம் இல்லத்தினர்களுக்கு உபயோகப்பட முடியாது. அவ்வளவு மங்கலான வெளிச்சம். ஆனால் விளக்கைச் சுற்றும் விட்டிலுக்குப் போதுமானது. அந்த காடா விளக்கைச் சுற்றிலும் எவ்வளவோ விட்டில்கள் பறக்கின்றன. பறந்து கொண்டும் வருகின்றன. ஆனால் கணத்துக்குக் கணம் விட்டிலின் தொகை குறைந்துக் கொண்டே வருகிறது. ஆம். ஒவ்வொன்றாக இறக்கின்றன. இறக்கும் விட்டிலைப் பறக்கும் விட்டில் பார்க்கிறது. 'நம் இனத்தான் ஒருவன் இறந்து விட்டான்' என்ற உணர்வு அதற்கு ஏற்படாதா? ஏற்படத்தான் வேண்டும். அப்படியானால் அவைகள் அதே நிலைக்கு ஏன் தங்களையும் உள்ளாக்கிக் கொள்கின்றன.

வெளிச்சத்தைச் சுற்றிப் பறப்பது அதற்கு விளையாட்டாக இருக்கின்றது. அந்த நிலையிலே எதிர்ப்படும் இடை

அன்புநிறை தாய்மையர்கள் ஆயிரவர் ஆயினுமே
இன்பார் நினக்கிணையர் உண்டோ இறையோனே

யூழு பொருட்டாகத் தெரிவதில்லை. 'நம் இனத்தான் இறந்தானே' என்ற எண்ணத்தோடே, மேலும் சற்று சிந்தித்து இருந்தால் விளையாட்டிலே நெளியும் பயங்கரம் அதற்குத் தெளிவாகும். உழைப்பிலே களைத்து இருக்கும் மனிதனுக்குச் சற்று சிந்திக்க எப்படி நேரமில்லையோ, சிந்திக்காமல் எப்படிப் பழகினானோ, அதே நிலைதான் அந்த விட்டிலுக்கும். வெளிச்சத்திலே கவர்ச்சி கொண்டு, மையத்திலே உயிரைக் குடிக்கும் நெருப்பு இருப்பதை உணராது விட்டில்கள் இரையாகின்றன. இதைப் போல்தான் மனிதர்களும் மனவயப்பட்டு பெண் மையலிலே அலைபட்டு கருத்தை இழக்கிறார்கள். 'மையார் தடங்கண் மாது மயலில் பட்டு உழலாதே' என்று அருணகிரிநாதர் கூறியிருக்கிறார்.

அடுத்து ஒரு காட்சி! முன்போன்ற ஒரு இல்லம். குழந்தையை வைத்துக் கொண்டு ஒரு தாயார் அமுதூட்ட முயற்சி செய்கிறாள். குழந்தை அமுதைச் சாப்பிட மறுக்கிறது. அன்னை கொஞ்சுகிறாள், கெஞ்சுகிறாள், கதை சொல்லுகிறாள், பாட்டுப் பாடுகிறாள். 'கண்ணே! சாப்பிடு' என்று பரிவுடன் பால் சோற்றை ஊட்டுகிறாள். குழந்தையோ எதற்கும் அசையவில்லை. வீண் முரட்டுத்தனம் பிடித்துச் சாப்பிடாமல் ரூட்டியடிக்கிறது. அந்நிலையிலும் அன்னை குழந்தையின் மேல் கோபிக்கவில்லை. என்னென்னமோ விளையாட்டுக் காட்டி, அன்னமூட்டப் பாடுபடுகிறாள். தன் வயிற்றில் பிறந்த சிசுவிடம் அவளுக்கு அத்தனை அன்பு, பாசம், பரிவு, கருணை யெல்லாம்.

ஆனால் அகில உலகத்தையும், அண்டசராசரத்தையும் படைத்து அருள் செய்யும் இறைவனுக்கோ, எண்ணிறந்த குழந்தைகள்! நாம் எல்லோருமே அவரின் குழந்தைகள் தானே! இறைவனுக்கும் ஒரு தாயின் மனசு இருக்க வேண்

அப்பஎன் றேபலரை அழைக்கின்றேன்; ஆனாலும்
இப்பாரில் மெய்யப்பன் எம்பெருமான் நீயன்றே

டுமல்லவா? இருக்கிறது. நாம் பிறந்தது, வளர்ந்தது, வாழ்வது எல்லாமே அவன் செயலில்தான்.

மாணிக்கவாசகர் இந்த மூன்று காட்சிகளையும் ஒரு பாட்டாகப் பாடியிருக்கிறார். இறைவனின் உத்தரவுப்படி உத்தரகோச மங்கைக்குச் சென்றிருந்த திருவாதவூரர், இறைவன் திருவுரு காணப் பெறுமையால், விட்டிலைப் போலக் கனிமொழி பேசும் காரிகை மயலில் படாவண்ணம் காத்தருளிய ஈசனின் திறத்தை, மனத்திலே பன்னிப் பன்னி நினைத்து உருகுகிறார்.

வண்டுகள் மொய்க்கும் மணமிகு மலர்களைத் திருமுடியின்கண் வைத்திருக்கும் உத்தரகோசமங்கை இறைவனிடம், தன் கடப்பாடுடைமையைக் கனிவாகச் சொல்லுகிறார். குழந்தை விரும்பாவிட்டாலும் தாய் எப்படியாவது உணவு ஊட்டவில்லையா? அதுபோல நீ என்னை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்று, சந்நிதி முன்பு இதோ பாடுகிறார் கேளுங்கள்!

"செழிகின்ற தீப்புகு விட்டிலில்
சின்மொழி யாரிற் பன்னாள்
விழுகின்ற என்னை விடுதிகண்
டாய்! வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர
கோச மங்கைக்கு அரசே!
வழிநின்று நின்னருளாரமுது
ஊட்ட மறுத்தனனே!

(திருவாசகம்-108)

ஆரம்பத்தில் எதைப்பற்றியுமே சற்று சிந்திக்கப் பழகினால், எல்லாவற்றிலும் உண்மையுருவம் தெளிவாகப் புலப்படும். மருட்சியும், கவர்ச்சியும் குறையும் உடைய மனம், மலரடியான் மீது ஊர்ந்து செல்லும் மாசில் வாழ்வு கிட்டும்!

ஏனுடைய என்மனத்தால் எத்தனை சிந்தித்தாலும்,
மாணுடைய நீதுணை! மற்றிலையென் றோர்ந்தேனே

வாழ்க்கை யாது?

(சிவானந்த விஜயலக்ஷ்மி)

வாழ்க்கை யாது? ஒரு கவளம் உண்ண, ஓர் ஆடை உடுக்க, ஒரு மூலை படுக்க; ஒரு மணி அழுகைக்கிடையில் ஒரு நொடிச் சிரிப்பு. மலை போன்ற துன்பக் குவியலில் ஒரு கடுகளவு இன்பம். இதுவே வாழ்க்கை!

நொடியில் தோன்றிக் கணத்தில் மறையும் ஒரு மேக படலம் இவ் வாழ்க்கை. ஆனால், அந்த நொடிக்குள் அதில் எத்தனை வேறுபட்ட விநோதக் காட்சிகள் தோன்றுகின்றன! தோன்றிய விந்தைபோல் இருந்த இடம் தெரியாது மறைகின்றன! நாழிகைதொறும் மாறி அமையும் மேகம் போல, நாட்கள்தொறும் மாறுபட்ட அநுபவம் நிறைந்ததே வாழ்க்கை!

வாழ்க்கை யாது? சிறு புல்லில் மொட்டு அரும்புகிறது; மலர்கிறது. எங்கிருந்தோ பலத்த காற்று வீசுகிறது. மலர் அக்காற்றால் அடிக்கப்பட்டு எங்கோ சென்று விடுகிறது. மலர் இருந்த சுவடுகூடத் தெரிவதில்லை. இது போன்றதே நம் வாழ்க்கை.

வாழ்க்கை, இது ஓர் நடமாடும் நிழல்; ஆம்! சில மணி நேரம் திரையில் காட்டப்படும் நிழல். திரை விலக்கப் படுகையில் அது தோன்றுகிறது, பேசுகிறது, பாடுகிறது, ஆடுகிறது. திரை மூடப்பட்டால்—காட்சிகள் அத்தனையும் கலைந்து விடுகின்றன. ஆம், இனி என்றும் காண முடியாதபடி மறைந்து விடுகிறது. அது இருந்தது என்று கூட எண்ணப்படுவதில்லை. ஆம்! வாழ்க்கை ஓர் நிழலே.

வாழ்க்கை ஒரு கதை! இன்ப முடிவு கொண்ட கதையும் உண்டு, துன்ப முடிவு கொண்ட கதையும் உண்டு. ஆனால், கூறுபவனின் திறத்திற்கேற்ப அக்கதைக்கு மதிப்

உனை நினையார் கையால் ஒருபொருளும் வாங்கா
எனையளிநீ, தாயர் இருவர்நடு நின்றோனே

புக் கொடுக்கப்படுகிறது. சில கதைகள் மூடன் கூறும் கதைகளாகின்றன. அவை சத்தமும், சந்தடியும், சலசலப்பும் மிகுந்ததாக இருக்கலாம். ஆனால், சாரமற்ற சக்கை, பொருளற்ற புலம்பல். அர்த்தமற்ற அவலக் கதைகளாகின்றன. புத்திமான்கள் புகலும் பொருள் பொதிந்த கதைகள், நெடுநாள் நினைக்கப்படுகின்றன; பன்னாள் பேசப்படுகின்றன; பலரால் பகரப்படுகின்றன.

வாழ்க்கை யாது? இது பலவர்ணக் கண்ணாடிகளால் செய்யப்பட்ட ஓர் கூடு. நடுவே ஓர் விளக்கு. ஓரொரு பக்கத்தில் ஓரொரு வர்ணமாக உள்ளிருக்கும் ஒளி வெளியே தெரிகிறது. நோக்கும் திசைக்கு ஏற்ப விளக்கின் ஒளி வேறுபடுகிறது. ஆனால், புறத்திருந்து பார்க்கும் ஒரு நிறமும் ஜோதியின் நிறமல்ல. உள்ளே நிறமற்ற நிர்மல ஜோதி இருக்கிறது. ஆனால், புறத்தே பலவர்ண ஜோதிகள் தென்படுகின்றன. உள்ளிருக்கும் ஆத்ம ஜோதியை பல்வகையாகப் பிரகாசப்படுத்தும் ஒரு கண்ணாடிக் கூட்டை ஒத்ததே வாழ்க்கை!

மரத்தில் ஒட்டியுள்ள இலை போன்றது வாழ்க்கை. மரத்திற்கும் இலைக்கும் சம்பந்தமுள்ளமட்டும் பசுமையும் பெருமையும் அதற்கு உண்டு. மரத்திலிருந்து பிரிந்துவிட்டாலோ, காற்றால் அலைப்புண்டு, காலால் தேய்ப்புண்டு, மேட்டிலும் பள்ளத்திலும் உருண்டோடி, செத்தை என்று ஒதுக்கப்பட்டு, நசுக்குண்டு, மக்கி மடிகிறது. வாழ்க்கைக்கு ஆதாரமான ஆண்டவன் என்னும் மரத்துடன் தொடர்பு இருக்குமாகில், அசைவில்லை, அல்லலில்லை, ஆட்டமில்லை, அழிவில்லை; அமைதியுண்டு, அழகுண்டு, அருளுண்டு, ஆனந்தமுண்டு. தொடர்பு தவிர்ந்திடிலோ, நாசமே, முற்றும் நாசமாகிவிடும். மரத்திற்கு ஒரு நாளும் அழிவில்லை. பழைய இலைகள் உதிர்ந்தால் ஆங்குப் புதிய இலைகள் முளைத்தெழும்!

வெள்ளத்தில் ஓடம் விட்டுச்செல் சம்பந்தர்
கொள்ளும் திருவருள்யான் கொள்ளுவதும் என்றேயோ

வாழ்க்கை ஓர் நீரோட்டம். நீர் தேங்கிடின் நாற்ற மெடுக்கும். ஓரிடத்தில் தங்கினால் உலகுக்குப் பயனில்லை. ஓடினால் பயனுண்டு. நீரின் நோக்கம் தோன்றிய இடமாகிய கடலை நாடிக் கலப்பதே. எனவே மலையென்றும், பள்ளமென்றும் பாராது ஓயாது ஓடுகிறது; கடலில் கலக்கிறது. நாட்டிலுள்ள நதிகளெல்லாம் இதையே நமக்குக் காட்டுகின்றன. வாழ்க்கை ஓடும் நதிபோல பலருக்குப் பயனளிக்க வேண்டும். தேங்கிய நீர், தானும் பயனடைவதில்லை; தன்னை அடைந்தார்க்கும் பயன் தருவதில்லை.

வாழ்க்கை ஓயாது அலைவீசும் கடலை ஒத்தது. ஏற்றமும் தாழ்வும், இன்பமும் துன்பமும் நிறைந்தது. மேலாகப் பார்த்தால் நுரையும் குப்பையும் நிறைந்திருக்கும். ஆழ்ந்து பார்த்தால் விலைமதிக்க வொண்ணாத முத்துக்களும் பவழங்களும் கிட்டும். பலர் இதன் புற அழகை, பரந்த பரப்பை, விரிந்த விரிவை, நீல நிறத்தை, அலை எழும்பி வீழும் அழகைக் கண்டு அதிசயித்து, வாய் திறந்து நின்று விடுகின்றனர். கடலை நாடி வருவது அதில் நீராடி இன்புறவும், ஆழத்திருக்கும் முத்தை அகழ்ந்தெடுக்கவும் என்பதை அறியாதிருந்து விடுகின்றனர். பலர் அலையில் அடிபடும் வைக்கோல் போல இன்ப துன்பங்களால் அலைப் புண்டு, கரையில் தள்ளப் பட்டும், உள்ளே இழுக்கப்பட்டும் அல்லலுறுகின்றனர். சிலர் அலைகளைக் கண்டு மலைக்காது, அவற்றுடன் எழும்பியும் மூழ்கியும் நல்ல ஸ்னான சுகத்தைப் பெறுகின்றனர். வெகு சிலரே ஆழத்திலிருக்கும் முத்துக்களைத் திரட்ட மூச்சடக்கி உள்ளே செல்கின்றனர். வாழ்க்கையின் விந்தையை நோக்கி வியப்புற்று நிற்பதில் பயனில்லை.

வாழ்க்கை யாது? இது ஓர் இடிகரை. நேற்றிருந்த கரை இன்றில்லை. இன்றுள்ளது நாளையிராது. நாள்தோறும் மாறிய போதிலும் கூர்ந்து காண்பவர்க்கன்றி

ஆண்பனையைப் பெண்பனையா ஆக்கியது மெய்யாமேல்
காண்பனையாம் என்னைக் கனியவைத்தால் ஆகாதோ

ஏனையவர்க்கு என்றும் ஒரே பாங்கில் தோன்றும் இடிகரை. இதன் தோற்றமும் அழிவும் விசித்திரமானது. ஆனால், அவற்றைக் கண்டு அயராதவனே அறிஞன். அறிவில்லா தவன், இது இடிகரை என்றறியாது ஓரம் வரை செல்லு வான். இவன் கால் பட்டதும் கரையும் இடியும். ஆனால் அறிஞனோ, கரையின் தன்மையை உணர்ந்து, அருகில் செல்லவும், அதனைப் பயன்படுத்திக் கொள்ளவும் தவற மாட்டான்!

வாழ்க்கை வாழும் தகுதி உடையதுதானா! இது வாழ் பவனைப் பொறுத்தது. வாழ்க்கை ஓர் விநோதமான பந்தயம். மனிதன் ஒவ்வொருவனும் இதில் பங்கு கொள் கிறான்; பங்கு கொண்டாக வேண்டும். வெற்றியோ தோல்வியோ, அவனவனது சக்திக்கும் முயற்சிக்கும் ஏற்ப பயன் கிட்டுகிறது. ஆனால், பந்தயத்தில் பங்கு கொள்ளாது விலக முடியாது. இடையிலே இடர்கள் பல இருக்கலாம். ஏற்றமும் தாழ்வும் எதிரே தோன்றும். மத்தியில் முட்டுக் கட்டைகள் பல முளைத்தெழும். ஆனால், முட்டுக்கட்டை யைக் கண்டு முடங்குவதில் பயனில்லை. அவற்றைத் தாண்ட வேண்டும்; ஓட வேண்டும்; சாட வேண்டும்; இறுதி எல்லையை எய்த வேண்டும். பக்கங்களில் பார்ப் பவன் பின் தங்குகிறான்; இலக்ஷியத்தை மறப்பவன் இடை யில் தத்தளிக்கிறான். நோக்கமெல்லாம் இறுதி எல்லையில் கொண்டவன், விரைவில் அதனை எய்துகிறான்; வெற்றி கொள்கிறான். கவனம் கொண்டவன் கஷ்டப்படுவதில்லை. இறுதிவரை ஓடுபவன் எல்லைக் கோட்டிலே இன்ப இதய ஒளியைக் காண்கிறான்!

வாழ்க்கை ஓர் கடற்பயணம்! ஆனால் நாமாக நமது காலத்தையும், புறப்படும் நாழிகையும் தேர்ந்தெடுக்க முடியாது. சாதகமான காற்றையும் சரியான கப்பலையும் கேட்டுப் பெற முடியாது. விதித்த வேளையில் கொடுத்த ஓடத்தில் துவங்க

வேதத் தகத்தும் புறத்தும் விளங்குகின்ற
நாதா! நின் பால்சாரும் நாயகியும் ஆவேனோ

வேண்டும் இப்பயணத்தை! இக் கப்பலில் ஒரு 'மாலுமி திசைக் கருவி' உண்டு. ஆம். அது உள்ளுறை அறிவே. பாய்மரத்தைப் பாதுகாப்பதும், துடுப்பிட்டுத் தள்ளுவதும் நம் கையில் உள்ளது. காற்று மாறுன திசையில் அடிப்பினும் காற்றோடு கப்பலைச் செலுத்தும் பொறுப்பு நம் கையில் கொடுக்கப் பட்டுள்ளது. எத்திசை நோக்கினும் வட திசையே காட்டும் காந்தம் (marinar's compass) போல இறைவன் ஒருவனையே காட்டும் உள்ளறிவு துணை புரிய, கைசோராது துடுப்புமிட்டு, காற்றோடு செல்லவும் துணிவோமாகில், என்றாகினும் ஒரு நாள் கரை சேருவது திண்ணம். படகுக்கும் ஆபத்தில்லை; பயணத்திற்கும் பங்கமில்லை!

வாழ்க்கை ஒரு விளையாட்டு! ஆன்ம அளவை அளவிட்டுப் பார்க்கும் விளையாட்டு. இதில் நாம் பெறுவது என்ன என்பது பிரதானமில்லை. நாம் எங்கு எவ்வாறு இருக்கிறோம்; என்ன முறையில் விளையாடுகிறோம் என்பதே பிரதானம். வாழ்க்கையின் சிக்கல்களெல்லாம் நமக்கு விளையாட்டாகத் தோன்ற வேண்டும். பின்னர், வாழ்க்கை வெற்றியே நிரம்பிய விளையாட்டாக மாறுவதில் வியப்பில்லை. இன்பமும் துன்பமும், அழிவும் ஆக்கமும், ஏற்றமும் தாழ்வும், வெற்றியும், தோல்வியும், லாபமும் நஷ்டமும் எல்லாம் விளையாட்டாக, எல்லையற்ற விளையாட்டாகக் காக்ஷி கொடுக்கும்! வாழ்க்கை ஒரு களியாட்டமாக மாறிவிடும்! விளையாடுகையில் ஏற்படும் களிப்பு ஒன்றையே கருதி விளையாடுபவன், அதில் ஏற்படும் வெற்றி தோல்விகளால் பாதிக்கப் படுவதில்லை!

வாழ்க்கை ஓர் நாடகம்! ஒவ்வொருவனும் இதில் நடித்தே தீர வேண்டும். ஆண்டியோ அரசனே, ஏற்ற பாகத்தை இனிதாய் நடித்தாக வேண்டும். ஆனல் நடிப்பதைத் திருப்தியாக நடித்து விடுவோம். யந்திரம் போல் பாடம் செய்த வாக்கியங்களைப் படபடவென ஒப்பித்து, பாத்திரத்துடன் ஒன்றாது உயிரற்ற பாவையாய் நடிப்பதில்

கட்டுச்சோ றேந்திக் கனிந்த அப்பர் முன்வந்து
இட்டவர லாறென்னை இன்புறுத்து கின்றதுவே

பயனில்லை. அதற்கு மாறாக, தான் நடிப்பது நாடகமே என்பதை மறந்து, மேற்கொண்ட பாகத்தில் மிக்க ஈடு பட்டு, அதில் ஏற்படும் இன்ப துன்பங்களால் இதயம் புண் ணுவதும் அறிவின்மை. இத்தனையும் ஓர் நாடகம். நாம் உண்மையில் இந்தப் பாத்திரமல்ல; நமது வடிவம் வேறு, உணர்வு வேறு, உண்மை ஸ்வரூபம் வேறு என்பதை உணர்ந்து நடிக்க வேண்டும். இல்லையேல், உலகம் என்னும் கடிகாரத்தில் ஒழுங்காய் வேலை செய்யாத ஊசலாக, அழுகைக்கும் சிரிப்புக்கும், மதிப்புக்கும் அவமதிப்புக்கும், விருப்புக்கும் வெறுப்புக்கும் நடுவில் ஆட்டப்படும் ஊச லாக, அமைதியற்ற ஊசலாக நாம் மாறி விடுவோம். 'திரைக்குப் பின்னால்' ஓர் வாழ்வு உண்டு. அதுவே நம் சுயவாழ்வு, சத்திய வாழ்க்கை என்பதை உணர்ந்த நடிகர்க ளாக இருப்பின், ஏற்ற பாகத்தை இனிதாய் நடிக்கக் கூடும்; நாடகத்தில் வரும் சுகதுக்கங்கள் நம்மைப் பாதிக்காது.

வாழ்க்கை ஓர் கீதம்; ஆண்டவனின் அழியாத அமர கீதம். நம் சொல்லும், செயலும், சிந்தையும் இதன் சொற்களாகின்றன. நம் சொல், செயல், சிந்தை இம் மூன்றையும் இன்னிசை நிறைந்த கீதமாக, சுருதியுடன் லயித்த கீதமாக மாற்ற வேண்டும். சில சமயம் இது சோக கீதமாகவும், சில வேளை இன்ப கீதமாகவும் கேட்கப் படுகிறது. சோகமோ, சுகமோ, அனைவரும் கீதம் இசைத்தே தீரவேண்டும். பலர் வாழ்க்கையை வரட்டுச் சொற்கள் நிரம்பியதாக்கி வருகின்றனர். பேதலித்த மனம் படைத்தவர் கீதம் பாடக் கூடுமோ! உள்ளுணர்வு படைத்த உத்தமரின் வாழ்க்கை இன்ப கீதமாகிறது. இதய கீதம் ஒலிப்பதாக வாழ்க்கையை மாற்ற வேண்டியது நமது கடமையாகும்.

வாழ்க்கை ஓர் கவி; ஆண்டவனின் அருட்கவி; யாப்பும், இலக்கணமும், எதுகையும், மோனையும் இலங்கும்

சுந்தரர்க்குத் தோழனெனச் சொல்லிப் பரவைமனை
வந்ததுபோல் என்முன் வருவதுவும் என்றேயோ

கவி. ஒரு சிலரே கவிஞர்களாக முடிகிறது. கவிஞன் ஒருவன் சமூகத்தின் இதயத் துடிப்பாக இருக்கிறான். உள்ளத்தைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாக இவ் வாழ்க்கை எனும் கவி அமைகிறது. உலகில் தோன்றிய ஒவ்வொருவனும் இக்கவி புனைந்தாக வேண்டும். ஆனால், நம் பரிபாகத்திற் கேற்ப கவியின் சுவை அமையும். நம் கவியை இனிய கவியாக்க முயல வேண்டும்.

வாழ்க்கை ஓர் வீணை போன்றது. நாம் மீட்டும் தந்திக் கேற்ப அதனிடத்தி லிருந்து நாதம் கிளம்புகிறது. நாம் நோக்கும் பாங்குக் கேற்ப அது காக்ஷி கொடுக்கிறது. தவறாக மீட்டினால் அபஸ்வரமான சங்கீதமே கிடைக்கும். இதில் ஆச்சரியமில்லை. உத்தமமான ஒரு வாத்தியத்தை உபயோகிக்கும் வகை தெரியாது வீண் செய்தல் கூடாது. உள்ளத்தில் எழும் ஒவ்வொரு எண்ணமும் இவ்வீணையின் தந்திகளைத் தட்டுகிறது. எப்போதும் நல்லெண்ணங்களே நம் உள்ளத்தில் எழுமாயின், நம் வாழ்க்கை நல்ல ராகத்தில், அழகான முறையில் பாடப்படும் பாடலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கை அதிர்ஷ்ட தேவதையின் ஆட்டமல்ல, அன்பாம் இறைவனின் அருளாட்சி! வாழ்க்கை வெட்டிப் பொழுது போக்கல்ல, பண்பும் பயனும் படைத்த கலை! வாழ்க்கை உடலால் மாத்திரம் நடத்தப்படும் செயலல்ல, உணர்ச்சிகள் உருவாக்கும் மண்டபம்! வாழ்க்கை பிணி, பசி, மூப்புத் துன்பம் நிறைந்த சேற்றுக் குழியல்ல. அழியாத அமர ஆனந்த ஊற்று; மேலான மன பரிபாகம் மிளிரும் உயர்நிலை. இறைவனுடன் ஒன்றிடும் உத்தமப் பேறு! வாழ்க்கை எனும் பெண்ணுக்குக் கந்தலும் கிழிசலு மான ஆடை அணிவிக்க வேண்டாம். அன்பும், அருளும், ஒழுக்கமும், உண்மையும் அப்பெண்ணை அலங்கரிக்கட்டும்! உலகம் கொடுக்கும் நிலையற்ற இன்பத்தைச் சுவைக்க

நற்றவத்தோர் முன்செய்த நாலா யிரமான
குற்றம் குணமாகக் கொண்டஅருள் வாழியரோ

மாத்திரம் இவ்வாழ்க்கை கொடுக்கப்படவில்லை. புலன்கள் காட்டும் கானல் நீரைக் கருதி, பாலைவனத்தில் சுற்றி, கவலையும் களைப்புமுற்று, வீணுக்கிட வாழ்க்கை வழங்கப் படவில்லை. மயக்குற்ற மன இருளால் மதிமயங்கி, அறியாமையால் அற்ப சுகங்களுக்கு ஆசைப்பட்டு, அலைந்து சோர, வாழ்க்கை அளிக்கப் படவில்லை. வாழ்க்கை பயனற்ற பதராக, வெறும் வெற்று வேட்டாக, ஒன்றுக்கும் உதவாத, பகட்டுப் பகல் வேஷமாக, சத்தமும் சந்தடியும் நிறைந்து சாரமற்றதாக, சஞ்சலமுற்றதாகப் போதல் கூடாது. அதற்கு மாறாக, வாழ்க்கையில் நிரந்தர இன்பம் பொங்கிப் பிரவாகமெனப் பாய வேண்டும். இறைவனுடன் ஒன்றுபடும் உத்தமப் பயனை உயிர் பெற்று ஒளிர வேண்டும். மாயையின் மயக்கங்கள் மாள வேண்டும். உயிர்ச் சக்தி, உண்மையின் ஊக்கம் ஓங்க வேண்டும். அருள் திறன் அரியணையில் அமர வேண்டும்! அன்பும், அறனும், பண்பும் பயனும் பரிமளிக்க வேண்டும்!

வாழ்க்கையில் அகத்தில் உறையும் ஆத்மப் பிரகாசம் அகிலமெங்கும் வியாபிக்க வேண்டும். அறியாமையின் மருளாட்டம் அடங்க வேண்டும்; இதயத்தில் ஒளிரும் ஞான சூரியன் கால தேச வர்த்தமானங்களைக் கடந்து எங்கும் தன் ஒளியைப் பரப்ப வேண்டும். மனம், மொழி, மெய்யால் ஏற்படும் பிறவி நோயை மாற்றும் மருந்தாக வாழ்க்கை அமைய வேண்டும். துன்பமும் துயரமும் நிறைந்த உலகில் வாழ்க்கை இன்பப் பூஞ்சோலை யாக வேண்டும்!

வாழ்க்கையைப் பொருள் படைத்த தாக்குவோம். லக்ஷயம் ஒன்று காட்டுவோம். பிறந்ததன் நோக்கத்தையும் பயனையும் பெறுவோம்! வாழ்க்கையில் புன்மை தவிர்த்து புனிதப் படுத்துவோம்; இருளை யகற்றி இனிமை கொடுப்போம். மருளினை மாய்த்து மகிமை யளிப்போம். வாழ்க்கையை அருள், அன்பு, அறிவு, ஆற்றல், கலை இவற்

தில்லைமூ வாயிரவர் தெய்வவுளம் ஏத்துமுறை
ஒல்லையுணர்ந் துன்பால் உறுவதுவு மென்றேயோ

றைப் பெறப் பயிற்சி கொடுக்கும் 'பண்புப் பாடசாலை' என்றே கருதுவோம். இப்பள்ளியில் படித்து வெற்றியுடன் திரும்பும் மாணவர்களாவோம்! வாழ்க்கையைச் சத்தியப் போர் புரியும் 'சமர்பூமி' என்றே நோக்குவோம். அதில் சத்துருக்களைச் சாடிய சால்பு நிறை வீரர்களாக விளங்கு வோம்!

வாழ்க்கையில் வாழ்கிறேன்; மேலாம் வாழ்க்கை வாழ் கிறேன்; லக்ஷ்ய வாழ்க்கை மேற்கொள்கிறேன் என்று பிரதிக்ஞை செய்வோம். நாளை முதல் வாழ்கிறேன் என்பான் அறிவிலாதான்; நேற்றே வாழ்ந்தவனே புத்தி மான். இன்று வாழ்கிறேன் என்றுகிலும் எண்ணுவோம்; இன்றே வாழ முற்படுவோம். இன்று வாழாதவன் நேற்று வாழவில்லை; நாளையும் வாழ மாட்டான். எனவே, இந் நொடியிலேயே இத்தகைய வாழ்க்கையை மேற்கொள் வோம்.

வாழ்க்கை உண்மையானது; நிரந்தரமானது; அழியா தது; அமரத்வம் பெற்றது. நாம் வாழ்க்கை துவங்கிய வகை யறியோம். வாழ்க்கை எனும் அரங்கில் எங்கு, எப்போது, எவ்வாறு நுழைந்தோம்; எங்கு, எப்போது, எவ்வாறு இதனின்று புறப்படுவோம் என்பதை அறியோம். ஆனல், இடையில் நன்முறையில் வாழ்ந்தால் நன்மையே கிட்டும் என்பது திண்ணம். 'வாழ்க்கை ஓர் கனவு' எனக் கூறிக் கழிப்பதில் பயனில்லை. உள்ளுறை ஆவி உறங்கு மாகில், வாழ்க்கையும் உறங்கிப் போகும். எனவே, விழித் தெழுவோம். விழிப்பே வாழ்க்கை. 'எழுமின்! விழிமின்! கருதிய காரியம் கைகூடும் வரை உழைமின்! என்பது உபநிஷத் வாக்கியம்.

திருநீல கண்டத் திருவார்ந்த மெய்ம்மனுவை
உருவேற்றும் என்னை உவந்தேற்றல் என்றேயோ

பழநித் திருப்புகழ்

விரிவுரை

(குகஸ்ரீ)

மூல மந்திர மோதல் இங்கிலை
யீவ திங்கிலை நேயம் இங்கிலை
மோனம் இங்கிலை ஞானம் இங்கிலை மடவார்கள்

மோகம் உண்டதி தாகம் உண்டப
சாரம் உண்டப ராதம் உண்டிடு
மூகன் என்றொரு பேரும் உண்டருள் பயிலாத

கோல முங்குண ஈன துன்பர்கள்
வார்மை யும்பல ஆகி வெந்தெழு
கோர கும்பியி லேவி ழுந்திட நினைவாகிக்

கூடு கொண்டுழல் வேனை யன்பொடு
ஞான நெஞ்சினர் பாலி ணங்கிடு
கூர்மை தந்தினி ஆளவந்தருள் புரிவாயே;

பீலி வெந்துயர் ஆலி வெந்தவ
சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை
பீதி கொண்டிட வாது கொண்டருள் எழுதேடு

பேணி அங்கெதிர் ஆறு சென்றிட
மாற னும்பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு வேற வென்றிடு முருகோனே!

ஆலம் உண்டவர் சோதி யங்கணர்
பாகம் ஒன்றிய வாலை அந்தரி
ஆதி அந்தமும் ஆன சங்கரி குமரேசா!

ஆர ணம்பயில் ஞான புங்கவ!
சேவ லங்கொடி யான பைங்கர!
ஆவி னன்குடி வாழ்வு கொண்டருள் பெருமாளே!

பாங்குடைய நல்லார்தம் பாதஞ்சே வித்தடியேன்
தீங்கின்றி வாழத் திருவருளைச் செய்யாயே

(பீலி—முருகோனே!)

(பதவுரை): பீலி வெந்து—(கூன் பாண்டியர் சுர நோயைத் தீர்க்க அவர் மேனிமேல் தடவிய) மயில் பீலி வெந்து;

உயர் ஆலி வெந்து—வளர்ந்த கமண்டல நீரும் வற்றி; அ அசோகு வெந்து—(கையில் பற்றிய) அந்த அசோகும் தீய்ந்து;

அமண் மூகர் நெஞ்சிடை பீதி கொண்டிட வாது கொண்டு—அமணர்களான அறிவிலிகளின் மனத்தில் பேரச்சம் பிறக்க, (மேலும் அவர்கள் எழுப்பிய அனல் புனல்) வாதத்திற்கு உடன் பட்டு;

அருள் எழுது ஏடு—அருளால் வளர்ந்த (திருப்பாசுரத்) திரு ஏடானது;

பேணி அங்கு எதிர் ஆறு சென்றிட—(வைகை) ஆற்றின் வழியே விரும்பி எதிரேறிச் செல்ல;

மாறனும் பிணி தீர—(வேந்தனும் ஓங்குக என்று பாசுரத்தில் உள்ளபடி உடல் கூன் நிமிர்ந்து) பாண்டியனும் (பிறவி) நோய் தீர;

வஞ்சகர் பீறு வெம்கழு ஏற வென்றிடும் முருகோனே—(தம்மைத் தாமே வஞ்சித்துக் கொண்ட) வஞ்சக அச் சமணர்கள், (உடலைக்) கிழிக்கும் கொடிய கழுமரத்தில் ஏறும்படி வென்ற இளம் பெருமானே!;

(ஆலம் உண்டவர்—குமரேசா !)

ஆலம் உண்டவர்—(உம்பரைக்காக்க பாற்கடல்) விடத்தைப் பருகியவரும்; சோதி அம் கணர்—அருள் ஒளி யருளும் அழகிய (கனிந்த) நெற்றிக் கண்ணரும் ஆன சிவனாரது;

பாகம் ஒன்றிய வாலை—இடப் பாகத்தில் அமர்ந்த இளங்குமரியும்; அந்தரி—ஞான ஆகாய வடிவியும்; ஆதி அந்தமும் ஆன சங்கரி—(உலகம் தோன்றுதற்கு) முன்னும் இருந்து, (சர்வ சம்மாரத்தின்) பின்னும் இருப்பவளாகி, (பிறவி) இளைப்பகற்றும் பெருமாட்டி யருளிய குமர இறைவா !

(ஆரணம் பயில்—பெருமாளே !)

ஆரணம் பயில் ஞான புங்கவ—(வேத) சாகைகளில் இருந்து விளையாடுகின்ற மேலான ஞான மிடுக்குடையோனே!

வாழியென நின்னை வழுத்தும் வழிவளர
ஆழியப்பா! நின்றன் அருணோக்கம் செய்யாயோ

சேவல் அம் கொடி ஆன பைங்கர—அழகிய சேவல் கொடி அமைந்த (உயர்ந்த) பசுமைத் திருக்கரம் உடையோனே!

ஆவினன் குடி வாழ்வு கொண்டு அருள் பெருமாளே—திருவாவினன் குடியில் பெருவாழ்வுடன் இருந்து, (அதைப் பிறர்க்கும்) வழங்கும் பெரிய பொருளே!

(மூல மந்திரம்—இங்கிலே)

மூல மந்திரம் ஓதல் இங்கு இலே—(முத்திக்குரிய) மூல மனுவை, இவ்வுலகில் (அடியேன்) உருவேற்றியது இல்லை;

ஈவது இங்கு இலே—(எல்லாம் உன்னடிமையே! எல்லாம் உன் உடைமையே என்று) என்னை உமக்கு அர்ப்பணித்ததும் இல்லை;

நேயம் இங்கு இலே—(உன்பால்) அன்பு (என்பால்) இங்கு உதித்ததும் இல்லை.

மோனம் இங்கு இலே—(இந்த) இக வாழ்க்கையில், கருவி கரண சேட்டை கழன்றதும் இல்லை.

ஞானம் இங்கு இலே—(சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவ) ஞானம் இப்பிறப்பில் (சிறிதேனும்) இல்லை;

இவைகட்கு மாறாக

(மடவார்கள்—வினைவாகி—

மடவார்கள் மோகம் உண்டு—இளநல மாதரை (மோந்து திரிகின்ற) மோகம் உளது; அதி தாகம் உண்டு—(அவர்கள் அதர பானத்தில்) அளவிறந்த வேட்கை உளது; அபசாரம் உண்டு—(அதற்கு ஏற்ற) துராசாரம் உளது; அபராதம் உண்டு—(அவ்வகையில் பொருள் இழப்பு ஆன) அபராதம் விளைவும் உளது;

இடு மூகன் என்று ஒரு பேரும் உண்டு—(அதனால் பிறர்) இட்ட கீழ்மகன் என்ற (கேவலமான) ஒரு பேரும் உளது;

அருள் பயிலாத கோலமும்—(திருநீறு அணிதல் முதலிய) திருவருள் நெறியில் பழகாத (செயற்கைக்) கோலமும்;

குண ஈன துன்பர்கள் வார்மையும் பல ஆகி—இழிந்த குணங்களுடன் துன்பங்களை விளைப்பவர்தம் நெடும் தொடர்பும் பல உடையவனாகி;

காட்டுமந்தி சேட்டை கணக்கப் புரிமனத்தை
ஆட்டி யுனதடியில் அண்மவைத்தால் ஆகாதோ

வெந்து எழு கோர கும்பியிலே விழுந்திடு அ நினைவு ஆகி—வெப்புக் கொண்டு மேலெழுகின்ற கோரமான கும்பி பாகம் எனும் நரகில் வீழ்தற்கு உரிய அச் செயல்களில் (இடையறாத) நினைவை யுடையவனாய்;

(கூடுகொண்டுழல்வேனை—அருள் புரிவாயே)

கூடுகொண்டு உழல்வேனை...(மலக்) கூடான இவ்வுடலைச் சுமந்துகொண்டு உழல்கின்ற என்னை;

அன்பொடு ஞான நெஞ்சினர்பால் இணங்கிடு கூர்மை தந்து-அன்புடன் ஞானம் (நிறைந்த) இதயமுளார் இடத்தில் சேர்ந்து இருக்கும் உயர்ந்த அறிவை உதவி;

இனி ஆள வந்து அருள் புரிவாயே—இனிமேலாயினும் ஆட் கொள்ள எழுந்தருளி அருள் பாலிப்பீராக, (எ—று).

விரிவுரை

அமணக் காடு மதுரையை அடர்த்தது. அப்பாவத்தால் பாண்டியரைச் சுரநோய் பாதித்தது. அதைத் தவிர்க்க அமணர் எண்ணினர். மந்திரம் கூறி, மயில் பீலியால் மன்னர் உடலை வருடினர். தேகத்தின் மேல் குண்டிகை நீரைத் தெளித்தனர். ஜ்வர வெம்மையால், சார்ந்த பீலி சாம்பராயது. வளமான குண்டிகை நீர் வற்றியது. கையில் இருந்த அசோகந் தளிரும் தீய்ந்தது.

இறுதியில் திருநீற்றுப் பதிகம் பாடி, சுரம் தவிர்த்தார் திரு ஞான சம்பந்தர். கண்ட அமணர் பீதி கொண்டனர். அழிந்ததே தம் சமயக் கொள்கையென்று அலறினர்.

அருள் நாதம் மெய்ம்மையை அறிவிக்கும். அம் மெய்ம்மையை உள்ளத்தில் அழுத்தி, அதை உண்மையாக்குவோம்; உண்மையை வாய்வழி வெளிப்படுத்தி, அதை வாய்மை யாக்குவோம்; வாய்மையை ஒலியாக்குவோம்; ஒலியைஎழுத்தாக்குவோம்; எழுத்தை ஏட்டில் ஆக்குவோம்; தெய்வ அந்த ஏட்டை, தீயில் சேர்ப்போம்; வேகாத ஏடு வெற்றி பெற்றது என்று, வாதத்தை அமணர் வளர்த்தனர், சுரவாதில் தோற்ற அவர்கள், தூய அனல் வாதிலும் தோற்றனர்.

மாயையால் காம மதுவுண்டு சாயாமல்
தாயாகி மாதரெலாம் தாம்தோன்றச் செய்யாயே

மூன்றும் வாதத்தில் முடி சூடலாம் என்று எண்ணினர்; புனல் வாதம் செய்வோம்; தோற்றவர் கழுவேற வேண்டும் என்று தம்மைத் தாமே வஞ்சித்துக் கொண்ட தடுமாற்றத்தால், தம் சமய உண்மை தழுவிய ஏட்டை, வெள்ளம் பெருகிய வைகையில் இட்டனர். அந்த ஏட்டை வெள்ளம் அடித்துச் சென்றது. சென்ற இடம் தெரியாது மறைந்தது.

'வாழ்க அந்தணர் வானவர் ஆன் இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம்; அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே'

என எழுதிய திருப்பாசுரம் ஏட்டை, வெள்ளப் பெருக்கில் இட்டார் பிள்ளையார். அந்த ஏடு ஆற்றின் எதிரேறிச் சென்றது. மேற்படி பாசுரத்தில் உள்ள 'வேந்தனும் ஓங்குக' என்ற வாக்கால், மன்னருடைய உடல் கூன் நிமிர்ந்தது. அதைக் கண்ட உலகம் களித்தது; எங்கும் அரஹரா ஒலி எழுந்தது.

சுண்டக் காய்ச்சிய பால், அளவில் குறையும். சுவையில் மிகும்; பால் குறைந்தது என்று அழுவார் போல், அமணர் தம் சமயம் அழிந்ததே என்று தடுமாறினர். ஆளுடைய பிள்ளையார் எவ்வளவு தடுத்தும் கேளாமல், கலக அமணர்கள் கழுவேறி மாய்ந்தனர் என்னும் வரலாறு, 5, 6 ஆம் அடிகளில் இருக்கின்றது.

எல்லாச் சமயங்களும், உயிர்த்து இருக்க வேண்டும். பயனுள ஒவ்வொரு மதமும் படிநிலைகள். மேதகு படிவழியாகத்தான் எவரும் மேலேற வேண்டும். ஒருபடி கெடினும் தடைபல விளையும். அந் நுட்பம் ஓராமல் சமய வாதிகள் தம்முள் முரணினால், அக் கால நிலைக்கேற்ப, விமல முருகன் வெளிப்படும்.

சமணக் களை பெருகி சைவப் பயிரை அழிக்க முயன்ற அமயத்தில், அபர சுப்ரமண்யம் ஞானசம்பந்தராகி வந்தது. ஆக்ரமித்த அமணர்களை, புடம்போட்டு எடுத்தது; இதுதான் இங்கு உள்ள அறிவிப்பு.

அமலனை மறந்து, அமுதம் இரட்ட அமரர் எண்ணினர். அவ் வினை விளைவு விடமா யெழுந்தது. அமரர் கதறினர்; அபயம் என்றனர். அத்தன் வந்தான்; அஞ்சற்க என்றான். ஆலம் உண்டான். அமரரைக் காத்தான்.

கண்ணுய்க் கருத்தைக் கடவுள் நினைக் கண்டேத்தி
விண்ணாகி யான்மா விளங்க அருளுதியே

பகலில் இரவில் ஒளி வழங்கும் பரிதிமதிகள், அவன் கண்கள். உயிருள் மருவும் இருளை யழிக்கும் அருள் ஒளியை, நெற்றிக் கண்ணில் நிறுத்தினன் நிமலன்.

அந்த எம்மான் இடத்தில் இருப்பவள் என்றும் குமரி. தியான சிரேட்டர்களை, ஞான விண்ணில் சந்திப்பவள் அத் தேவி. எப் பொருளிலும், முதலிலும் முடிவிலும் நிற்பவள் அம் முதல்வி. இறப்பு பிறப்பின் இளைப்பை யாற்றும் அந்த எம்பெருமாட்டியின் மைந்தன் குமரன்.

இடர் தவிர்க்கும் இரக்கமுளார்; ஒளி உணர்வினர் ஆன ஞானி யர் எல்லாம் சிவமாவர். இளமை கெடார். வளமான ஞானத் தார். பணிமுகத்தில் முன்னும் பின்னும் பயன் செய்வார்; அடைந் தார் அயர்வை அகற்றுபவர் ஆன சால்புடைய மாதர்கள் எல்லாம் சக்தியின் அம்சர். இவ்விருவர் நடுவில் குதூகலித்து வெளிப்படு வன் குமரேசன் என்பது, ஏழு எட்டு அடிகளில் இருக்கும் நுட்பம்.

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்;
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்;
உவமையிலாக் கலைஞானம்; உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"

என்றார் சேக்கிழார். கலைஞான வாதத்தில் கலந்தாரை, திருஞான சம்பந்தராய் வந்து தெளிவுறுத்தும் பெருமான், ஆரணங்களில் பயின்றிருந்த அத்தன். சிவனார்க்குக் குருவான செம்மல் ஆதலின், 'ஞான புங்கவா' என்றார்.

அருள் நூற்களை ஓத ஓத, ஓதவில் இருந்து நாதம் எழும். நாதம் ஒரு சேவல்; அக்கினி ஒரு சேவல், சூரன் பாதி யுடலான பதுமச் சேவல் ஒன்றையும் பரமகுமரன் பற்றியுளன்.

பரிபாகத்திற்குத் தக்கபடி பர நாதம், அபர நாதம், பராத்பர நாதங்களை முறையே எழுப்பும் மூன்று சேவல்கள் முருகனிடம் உள.

பேரின்பப் பெரு வாழ்வினன்; அதைப் பிறர்க்கும் அருள் வான் ஆதலின், 'பெருவாழ்வு கொண்டு அருள் பெருமாளே' என்று, வியந்து உவந்து விளித்தார்.

மூலமந்திரம் என்பது ஓரெழுத்து மனு. நினைவை நிறை வேற்றுவது என்பது அதன் பொருள். அது, விமலமான முறை யில் செய் விண்ணப்பமும் ஆகும்; அதி ரகஸ்யம் பல அதனில்

பாதார விந்தத்தில் பற்றைப் பெருக்கியெனக்
காதார மான அருளை யருளுதியே

அடங்கி யுள. ஓயாது அதை ஓதி ஓதி, 'ஊனவிழ உடலவிழ உணர்வவிழ' வரும் காலத்தில், ஓதுதல் தடைப்படும். அந்நிலையில் அந் நாதம் இயல்பாகச் செவியில் வந்து பாயும்; இதுதான் சுருதி முறை. இப் பொருளில், மந்திரம் ஓதல் எனப் பிரிக்காமல், 'மூல மந்திர மோதல்' என்றே கோடலுமாம்.

அடியவர்க்கு ஈதலில்லை; அவர் பால் அன்பில்லை; என முதல டிக்குப் பொருள் கொள்ளல் லேசு நடை.

மூல மந்திரம் ஓதாவிடினும், தலையணை மந்திரத் தையலர் உண்டு. அவர் பால் மோகமும் தாகமும் மூள்வது முறையோ? அபசாரத்தின் வழியே அபராதம் கட்டும்படி ஆவதுவோ? மோனி ஞானி என்ற பேர் இல்லாமல், மூங்கை என்ற பெயரோ மூள்வது?

அருள் நெறிக்கு அயலாகி, செயற்கை யழகு வெளிப்பட சிங்காரம் செய்வதோ? குணம் கெட்டார் தொடர்பால் கும்பி பாகமோ பெறுவது?

முருகோனே! குமரேசா! ஞான புங்கவா! பைங்கரா! பெரு மாளே! ஞானிகளிடம் உறவு கொள்ளும்படியான நுண்ணறி வைத் தா! எளிய என்னை ஆள வந்து அருள் செய் என்பது நான்காம் அடியில் உள்ள நலன்.

வாழ்க திருப்புகழ்!

அருணகிரிநாதர் அடிக்கமலங்கட்கே அடைக்கலம்!

அநுபூதி விளக்கம்

நிராகுல சல்லாபன்

(கி. வா. ஜ.)

உல்லாச சல்லாபத்தை அருளும் முருகன், மனிதனுக்கு இயற்கையாகவே உள்ள கவலையையும் போக்க உரை பகர்வான். கவலை உண்டாகப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் தலைமையான காரணம், தான் வேண்டும் பொருள் தனக்குக் கிடைக்காத குறையே. மனிதன் சுகமாக வாழ வேண்டுமென்று விரும்புகிறான். ஆனால் அவன் உடம்புக்கு நோய் வருகிறது. உணவு, உடை,

---

உய்யவழி காட்டும் உயர்ந்தஅருள் நூற்கள் தம்
மெய்யாம் பொருளுணர்த்தி மெலிவகற்றி ஆளாயே

உறையுள் ஆகியவற்றை மிகுதியாகப் பெற்று வாழவேண்டுமென்று அவாவுகிறுன். அதற்குரிய பொருள் அவனுக்குக் கிடைப்பதில்லை. நாலுபேர் மெச்ச வாழ ஆசைப்படுகிறுன். அவனை யாரும் அண்டுவதில்லை. கோடி கோடி வகைகளில் அவன் ஆசை விரிந்து படர்கிறது. ஆசைப்படப்படத் துன்பமும் கவலையும் மிகுகின்றனவே யன்றிக் குறைவதில்லை.

கிடைத்ததை வைத்துக்கொண்டு வாழலாம் என்று இருந்தாலோ, நோய் வருகிறது; மூப்பு வருகிறது; அப்பால் மரணமே வந்துவிடுகிறது. பணத்தாலும் புகழாலும் ஆற்றலாலும் அவற்றைப் போக்கிக் கொள்ள முடிவதில்லை. அந்த உண்மையை நினையும்போது மிகப் பெரிய அறிவாளிகளுக்கே கவலை வந்து கப்பிக் கொள்கிறது.

அறிவுள்ளவன் பொருள் இல்லையே என்று கவலையுறுகிறுன். பொருள் உள்ளவன் அறிவு இல்லையே என்று கவலையடைகிறுன். எல்லாம் இருந்தும் அவற்றை நெடுநாள் அநுபவிக்க வாழ்க்கை போதவில்லையே என்று கவல்கிறுன். இப்படியே உலகில் உள்ள யாவருக்கும் கவலை ஓயாமல் இருந்து கொண்டே வருகிறது.

"அவலக் கவலை கையா றழுங்கல்"

ஆகியவற்றுல் துன்பமயமாக அமைகிறது இந்த வாழ்க்கை.

இந்தக் கவலைகள் போக வேண்டுமானுல் என்ன செய்யவேண்டும்? உலகில் ஏதேனும் ஒரு பொருளால் குறையுடையவர்கள் அதை நிரம்ப உடையவரைச் சார்ந்து அந்தக் குறையைப் போக்கிக் கொள்கிறுர்கள். நூறு ரூபாய் வேண்டுமானுல் ஆயிரக் கணக்கில் பணம் வைத்திருப்பவனை அடைகிறுர்கள். ஆனுல் அவனுக்கும் குறை, நூற்றுக் கணக்கில் இராது; ஆயிரக் கணக்கில் தான்

என்பிழைகள் எண்ணிலவே ஏழைமதி காரணங்காண்
அன்னதனை மன்னித் தருளா யருளோனே

இருக்கும். அவன் தன் குறையைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமானால் தன்னினும் பெரிய லட்சாதிபதியிடம் செல்ல வேண்டும். அவன் மாத்திரம் குறையில்லாதவனாக இருக்கிறானா? அதுதான் இல்லை. அவனுக்கும் லக்ஷக்கணக்காகக் குறை முன்னே வந்து நிற்கிறது. அவன் தன்னினும் உயர்ந்தவனைத் தேடிக்கொண்டு ஓடுகிறான். ஒருவனாவது குறைவு இல்லாதவனாக உலகில் இல்லை. தன்னினும் கீழ்ப் பட்டவனிடம் உள்ள சிறு குறைகளைத் தீர்க்கும் இயல்பு இருந்தாலும், தன்னினும் மேற்பட்டவனைச் சார்ந்து தன் பெருங் குறையை நீக்கிக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறான். இந்தச் சுழல் சக்கரத்துக்கு முடிவே இல்லை. குறையில்லாதவனும் கவலையில்லாதவனும் யாருமே இல்லை.

கவலையுடையவனைக் கவலையுடையவன் அண்டினால் தன் கவலையை நிரந்தரமாகத் தீர்த்துக்கொள்ள முடியாது. யாரேனும் கவலையே இல்லாதவனாக இருந்தால் அவனிடம் சென்று தீர்த்துக் கொள்ளலாம். அப்படி யார் இருக்கிறார்கள்?

குறைவிலா நிறைவாக இருப்பவன் இறைவன் ஒருவன் தான். அவனுக்குக் கவலையே இல்லை. பிறர் கவலையைப் போக்கும் அருளே நிரம்பியவன் அவன். அவனை அண்டி வழிபட்டால் மனக்கவலை மாயும்.

> "தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது"

என்று வள்ளுவர் பணித்தார். தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத இறைவன் கவலையற்றவன். தன் தாளைச் சேர்ந்தாருக்குக் கவலை இல்லாமல் செய்பவன். ஆதலால் அவ

கூற்றனுக் காளாய்க் குமையாமுன் ஈர்த்தென்னை
ஏற்றி யடிநிழலில் இன்பளித்தால் ஆகாதோ

னிடம் தாயுமானவர், "என் கவலை ஓயாதோ?" என்று முறையிடுகிறார்.

"ஓயாதோ என்கவலை? உள்ளே ஆனந்தவெள்ளம்
பாயாதோ வாய்திறந்து பகராய் பாரபரமே"

என்கிறார்.

முருகன் கவலை அற்றவன்; நிராகுலன். தன்னை வழி படுவாருடைய கவலைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறவன். கவலை நீங்க வழிகாட்டுபவன். கவலை நீங்க உபதேசம் செய்கிறவன். அவனுடைய பரம ரகசியமான உள்ளொலியை, இருதய சல்லாபத்தைக் கேட்டுக் கவலை நீங்கிய பெருமக்கள் பலர். அருணகிரிநாதரும் அவர்களுள் ஒருவர். அகத்தியர் முருகனது சல்லாபத்தால் கவலை நீங்கினார். நக்கீரர் குகையில் அடைபட்ட போது திருமுருகாற்றுப் படை பாடினார். முருகன் தோன்றி, "அஞ்சேல்" என்று மொழிந்து அவர் கவலையைப் போக்கினான். அவன் உல்லாசத்தை உண்டாக்கும் சல்லாபத்தைச் செய்வது போலவே, ஆகுலத்தைப் போக்கும் சல்லாபத்தையும் செய்வான். தான் நிராகுலனாக இருந்து, ஆகுலத்தைப் போக்கும் நிராகுல சல்லாபத்தை அருளித் தன் அடியார்களையும் நிராகுலர் ஆக்குவான். அதனால் அவனுடைய சல்லாப வகைகளைச் சொல்லவந்த அருணகிரியார்,

"உல்லாச நிராகுல ... விதச்
சல்லாப விநோதனும் நீஅலையோ?"

என்று பாடுகிறார். அவன் நிராகுல சல்லாபம் அடியாரின் நிலைக்கும் இயல்புக்கும் ஏற்ப வெவ்வேறு வகையில் முகிழ்க்கும். அதனால் 'நிராகுலவித சல்லாப' விநோதன்' என்றார்.

சொந்தம்சொந் தம்என்றே சொல்லிப் பிரகிருதி
பந்தத்தில் ஆழும் பவமகற்றி ஆளாயோ

ROOTS OF CULTURE

Culture is the hand maid of the full life. Dr. Raman declared that the essence of life is *simplicity*. Great men of the world have always lived simple lives. It is a truism that a thing when it is known or understood, always seems simple. From the days of the Rishis, down to Mahatma Gandhi, two things seem to have been associated with great lives that have uplifted humanity; for example, a living faith in God and simplicity of life. The scholastic education which we have had for the best part of the past hundred years, has been lacking in general in both these ingredients All glory to the few exceptions that have outgrown the cramping influences of the exotic irrelevances and shot up to the heights of humanity, piety and adoration. These great qualities regarded as *sine qua non* of our ancient culture and civilisation were rightly stressed by Sri Radhakrishnan in his address at the Madras University when he said:

> "Philosophy is for the theologians. It is for the philosopher. the thinker, the prophet. What about the ordinary man. The ordinary man will have to accept the popular religion, which is, not popular in the vulgar sense of the term, but popular in the sense that it gives the capacity for *every individual* to acquire a perspective of the eternal. It enables all the individuals to live in this world with another kind of idea, with an outlook which makes one believe that his citizenship is elsewhere."

This is the citizenship not of the world, but of the universe. "Here in this country the

Nayanmars, the Alwars and the Acharyas have given us a a religion which is Catholic, which is comprehensive and which asks us to live not for ourselves, but to live for human welfare." The Vice President further said:

> "What is necessary is not a change in man's opinions. It is a change in the life of man that is necessary. We cannot get life eternal from texts......Look at the way in which we profess the highest ideals, yet follow in practice something else. It is necessary for us to realise how hypocritical the whole thing appears to be when we talk big and act low. The changing of our lives can be effected by many ways. One such way for the ordinary man is by *bhakti* and by *devotion*......"

"Our religion teaches us democratic behaviour. It points out to us that among the devotees of the Supreme, there are no distinctions of *jathi*, *vidya*. *rupa*, *kula* and *dhana*." The universal religion for all mankind lies in the practice of Bhakti, (whatever may be the demonstrational creed and religion), which is broadbased on the universalism of the love of God and the service of all His creatures. May the religion of Bhakti embrace the Universe and make gods of men!

Thiruppugal Mani.

571

நன்று செய்வதற் குடன்படு நெஞ்சே!
　　நம்பன் தாள்மலர் நாடியஞ் செழுத்தை
என்றும் ஏத்துதி ! எய்துவ தெல்லாம்
　　எம்பெரு மானருள் என்றுநீ எண்ணி,
ஒன்று காலத்தை விணடிக் காமல்
　　ஒண்மைநற் கலைகள் ஓதுதி யாயின்,
வென்றி மாலையைச் சூட்டிட நங்கள்
　　விமல மாச்சிவம் வெளிப்படுங் காணே !

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஸ்ரீ
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1957 மாசி—அமிர்தவசனி)

572

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd :—1924. Phone :—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
சிவநேயச் செல்வர்கள் ,,			
கணபதி பக்தர்கள் ,,			
முருகனடியார் ,,			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18